உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] சௌமிய - புரட்டாசி - 10—10—69 [ இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## மலை வில் வள்ளல்

கடவுள் தன்மையில் தீயவற்றை அழித்து நல்லவற்றை வாழ வைக்கும் தன்மையே முதன்மையானது. இதற்கு முதற் கண் வேண்டப்படுவது பேரறிவு. அஃதாவது, 'நல்லன எவை, தீயன எவை' எனவும், 'அவை எங்கெங்கு, எவ்வாறு உள்ளன' எனவும் எப்பொழுதும், எங்கும் நின்று அறியும் முற்றறிவு முதற்கண் வேண்டும். இதனையே திருவள்ளுவர் அரசன்மேல் வைத்து,

" எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்"

என வேறொரு வகையாகக் கூறினர்.

இனி இரண்டாவதாகத் தீயனவற்றை அழித்தற்கும், நல்லனவற்றை வளர்த்தற்கும் உரிய பேராற்றல் வேண்டப் படுவதாம். ஏனெனில், அஃதில்லையாயின், மேற்கூறியவாறு அறியும் அறிவினால் பயன் விளையாதன்றோ! இதனையும் திருவள்ளுவர்,

" அறன்இழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு"

என்பதனாற் குறிப்பித்தார்.

பேரறிவு, பேராற்றல் என்பவற்றின்பின் எல்லாரிடத்தும், எப்பொழுதும் மாறுமற் செல்வதாய பேரருள் வேண்டும். எதனால் எனின், அஃதில்லையேல், பேரறிவும், பேராற்றலும் செயற்பட வழி இல்லை.

" கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

" துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு"

என்னும் திருக்குறள்கள் இப்பேரருளையே குறிப்பிடுகின்றன. எனவே, 'அறிவு, ஆற்றல், அருள்' என்னும் மூன்றையும் முற்ற உடையவனே, 'இறைவன்' எனப்படும் முதற்கடவுள் என்பது விளங்கிற்று. 'இறைவன் தனது இயல்பு புலப்படு தற்கு வைத்த ஒன்றே அரசியல்' என்பதே சைவ சமயத்தின் முடிபு.

இத்தீயவைபோக்கி நல்லவை ஆக்கும் கடவுள் தன்மையை இனிது விளக்குதற் பொருட்டே தேவருள் சிலர் அசுரரை அழித்த வரலாற்றைப் புராணங்கள் ஆங்காங்குப் பலபட விரித்துக் கூறுகின்றன. 'அசுரர்' என்பவர் தீயனவற்றிற் கும், 'தேவர்' என்பவர் நல்லனவற்றிற்கும் முன்னிலையாய்

நிற்பவர்கள். தேவருள் சிலர் முதல்வராக எண்ணப்படுபவர்கள். ஆதலின், அம் முதல்வர்கள் அசுரரை அழித்துத் தேவரைக்காத்த வரலாறுகள் ஆங்காங்குப் பேசப்படுகின்றன. சிவபிரான் அசுரரை அழித்த வரலாறு ஒன்று மிகப் பழமையானது. அஃது ஏனைய வரலாறுபோலப் பொதுவாகக் காணப் படாமல், தனிச் சிறப்புடையதாய் விளங்குகின்றது. அஃது அப்பெருமான் திரிபுரம் எரித்த வரலாறு.

இதன்கண் உள்ள சிறப்பு யாதெனின், சிவபிரான் அசுரரை அழிக்கும் தலைவனுய் முன்னிற்க, ஏனை எல்லாத் தேவரும் அவன் குறிப்பின்வழி நின்று பணியாற்றினமையே யாம். அந்நிலை புராணங்களில் பின்வருமாறு கூறப்படுகிறது.

'தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி' என்னும் அசுரர் மூவர் தாங்கள் பெற்ற வரத்தால், பொன், வெள்ளி, இரும்பு என்னும் இவற்றால் வேறு வேருய் அமைந்த மூன்று பறக்கும் கோட்டைகளைப் பெற்று, அவற்றோடே பல இடங்களிலும் வானத்திற் பறந்து சென்று இறங்கித் தேவர்கட்கும், மக்கள் முதலிய பிற உயிர்கட்கும் பெருந்துன்பம் விளைத்து வந்தனர். அவற்றிடையே அவர்கள் சிவபிரானிடத்தும் அன்புடையராய் இருந்தனர். அவர் செய்யும் துன்பத்தைப் பொறுக்கமாட்டாது தேவர்கள் பலரும் சென்று சிவபிரானிடம் முறையிட்டனர். சிவபிரான், 'முப்புரத்தவர் நம்மாட்டு அன்புடையராய் இருத்தலின், நாம் அவரை அழித்தல் பொருந்தாது' என்று திருவுளம்பற்றத் திருமால் புத்தராய் நாரதரையும் உடன் அழைத்துக்கொண்டு திரிபுரங்களிற் சென்று பௌத்த மதத்தைப் பரப்பிச் சிவபத்தியை நீக்கினர். அதன் பின்னர்த் தேவர் அனைவரும் சென்று முப்புரத்தவர்கள் சிவபத்தியைக் கைவிட்டதேயன்றிச் சிவநெறியையும் பழித்துநிற்றலைத் தெரிவித்து முறையிட்டனர். அப்பொழுது சிவபெருமான் தேவர் அனைவரையும் போருக்கு வேண்டும் கருவிகளாக அமையப் பணித்தார். பூமிதேவி தேர்த் தட்டாயினள். சூரிய சந்திரர் இருவரும் தேரின் இருசக்கரங்களாயினர். மற்றைத் தேவர் அனைவரும் தேரின் மற்றை உறுப்புக்களாயினர். நான்கு வேதங்களும் தேரை இழுக்கும் நான்கு குதிரைகளாயின. வேதத்தை ஓதும் பிரமன் அக்குதிரைகளை ஓட்டித் தேரைச் செலுத்தும் சாரதியாயினன். யாவும் அமைந்தது கண்டு சிவபெருமான் மகாமேருவை வில்லாக வளைத்து,

வாசுகிப் பாம்பை நாணாக ஏற்றி, திருமால் அம்பாகவும், வாயுதேவன் அம்பின் இருபக்கத்துச் சிறகாகவும், அக்கினிதேவன் அம்பின் கூர்மையாகவும் அமைந்த கணையைத் தொடுத்துக் கொண்டு அத்தேர்மீது ஏறிச்சென்று முப்புரத்தையும், அவற்றின்கண் வாழ்கின்ற அசுரரோடே நீருகும்படி அழித்துத் தேவர்களது துன்பத்தைப் போக்கினர்.'

இங்ஙனம் கூறப்படும் வரலாற்றில், 'சிவபெருமான் ஓரம்பாலே முப்புரத்தையும் அழித்தொழித்தார்' என்றும், 'அம்பை எய்யாமலே தமது புன்னகையினுலே திரிபுரங்களை வெந்து நீருகச் செய்தார்' என்றும் இருவகையாக வரலாறு சொல்லப்படுகின்றது. எனினும், 'அம்பு எய்யாமல் சிரித்துப் புரம் எரித்தார்' என்பதே பெருவழக்கு.

" ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற;
ஒன்றும் பெருமிகை உந்தீபற"

என்னும் திருவாசகம் ஓர் அம்பும் எய்யப்படவில்லை என்றே கூறுகின்றது.

" உழல்மதில் சுட்ட தழல்நகைப் பெருமான்"

என்பது கல்லாடம் (காப்பு - 2.). மேலும் அந்நூல் மேற் கூறிய வரலாற்றை இனிது விளங்க விரித்துரைக்கின்றது.

" வேதியன் முதலா அமரரும் அரசனும்
போதுதூய் இரப்பப் புணரா மயக்கம்
நாரணன் நடித்த பெருவாய்த் தருக்கத்
தறிவுநிலை போகி அருச்சனை விடுத்த
வெள்ளமுரண் அரக்கர் கள்ளமதில் மூன்றும்
அடுக்குநிலை சுமந்த வலித்தடப் பொன்மலை
கடுமுரண் குடிக்கும் நெடுவில் கூட்டி
ஆயிரந் தீவாய் அரவுநாண் கொளீஇ
மாதவன், அங்கி, வளி - குதை, எழுநுனி,
செஞ்சரம்; பேருருள் அருக்கன், மதியாகத்
தேர்வரை வையமாகத் திருத்திச்

சென்னிமலை ஈன்ற கன்னிவிற் பிடிப்ப,
ஒருகால் முன்வைத் திருகால் வளைப்ப
வளைத்தவில் வட்டம் கிடைத்தது கண்டு
சிறுநகை கொண்ட ஒருபெருந் தீயின்
ஏழுயர் வானம் பூழிபடக் கருக்கி,
அருச்சனை விடாதங் கொருப்படு மூவரில்
இருவரைக் காவல் மருவுதல் ஈந்து
மற்றொரு வற்கு வைத்த நடம் அறிந்து
குடமுழ விசைப்பப் பெறும்அருள் நல்கி
ஒருநாள் அருச்சனை புரிந்திடா தவர்க்கும்
அரும்பெறல் உளதாம் பெரும்பதம் காட்டி
எரியிடை மாய்ந்த கனல்விழி அரக்கர்க்
குலவாப் பொன்னுல கடைதர வைத்த
சுந்தரக் கடவுள், கந்தரக் கரையோன்"

(பாட்டு — 26.)

என்பது அப்பகுதி. இதனுள், "புணரா மயக்கம்......விடுத்த" என்றது, திருமால் புத்தராய்ச் சென்று பௌத்த மதத்தைப் போதிக்கக் கேட்டு முப்புரத்தசுரர் சிவபூசையை விடுத்தமையைக் குறித்தது. "மலை ஈன்ற கன்னி விற்பிடிப்ப" என்றது, இடக்கை வில் பிடித்தமையை நயம்படக் கூறியது.

இக் கல்லாடப் பகுதியுள் மற்றொரு செய்தியும் குறிக்கப்பட்டமை காண்கின்றோம். அது, 'முப்புரத்தில் உள்ளோர் யாவரும் சிவநெறியை விடுத்தபோது மூவர்மட்டும் அதனை விடாது பற்றிநின்றனர். முப்புரம் எரித்த காலத்தில் சிவபெருமான் அம்மூவரை எரியாது காத்துப் பின் இருவரைத் தம் வாயில் காவலராயும், ஒருவனைத் தமது திருநடனத்திற்குக் குடமுழா முழக்குபவனாயும் இருக்கும் பேற்றினை அளித்தார்' என்பது. இவ்வாறே சுந்தரர் தேவாரத்திலும் சொல்லப்பட்டது.

மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின் திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக

மானே நோக்கிஓர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்கஅருள் செய்த
தேவதேவநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூருளானே.

" உய்யவல் லார்ஒரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற;
இளமுலை பங்கனென் றுந்தீபற "

எனத் திருவாசகமும்,

" மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார் "

எனத் திருஞானசம்பந்தர் தேவாரம் வெளியிடுகின்றன. மூவராவர் இவர் என்பதை, 'சுதன்மன், சுசீலன், சுபுத்தி' எனக் காஞ்சிப் புராணம் விளக்குகின்றது, இவை, 'உலகத்திற்கு எக்கேடு விளையினும் அது சிவனடியாரைத் தாக்காது' என்பதை விளக்கி நிற்கும்.

இனி மற்றொரு செய்தியையும் மேற்காட்டிய கல்லாடப் பகுதி வெளியிடுகின்றது. அது, 'முப்புரத் தலைவர்களும் பின்னர் நற்கதியை யடைந்தனர்' என்பது. அதனால், 'சிவபத்தியை மேற்கொண்டோர் பின்னர் அதன்கண் வழுவுவராயினும், அவ்வழுவிற்குரிய ஒறுப்பைப் பெற்றுப் பின் நன்மையே பெறுவர் என்பது விளங்கும்' என்பதாம். அதனையும் அந்நூலே எடுத்துக்கூறியுள்ளது.

இங்ஙனம் இவ்வரலாறு பிற்காலச் சமய நூல்களில் மட்டுமன்றி முற்கால இலக்கியங்களினும் கூறப்பட்டமை,

" ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் "

எனவரும் புறநானூற்று அடிகளால் நன்கு விளங்கும்.

'மலையாகிய வில்லில் பாம்பாகிய நாணை ஏற்றி, ஒரு கணையாலே மும்மதிலை அழித்தவன்' என்பது, கறைமிடற்றண்ணலது எல்லாம்வல்ல தன்மையை விளக்குவது. 'அமரர்க்கு வென்றி தந்த' என்று மட்டும் கூறாது, "பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த" என்றது, 'அவருள் எவரேனும் தனித்தாயினும், யாவரும் ஒருங்குகூடியேனும் அழிக்கலாகாத மும்மதிலை அழித்து அவர்கட்கு வெற்றியைத் தந்த அவனது பேராற்றலையும், பேரருளையும் விளக்குவது. (விறல்-வெற்றி) இவ்வாறு சிவபெருமானை ஆன்றோர் போற்றினர் என்றால், அவர்கள் யாரை முழுமுதற் பொருளாகக் கொண்டனர் என்பது சொல்லாமலே விளங்குவதாம். அதனால் திருநாவுக்கரசர் தமது தசபுராணத் திருப்பதிகத்துள் இவ்வரலாற்றைக் குறிப்பிட்டு, 'மலையைச் சிலையாக வளைத்த ஆற்றலும், வேண்டுவார் வேண்டுவனவற்றை அவர் வேண்டிவாறே தரும் வள்ளன்மையும் உடைய அவனே நமக்கு ஒப்பற்ற புகலிடம், என அருளிச்செய்கின்றார்.

நிலைவலி யின்றி எங்கும் நிலனோடு விண்ணும்
நிதனஞ்செய் தோடு புரமூன்
றலை நலி வஞ்சியோடி அரியோடு தேவர்
அரணம் புகத்த னருளால்
கொலைநல வாளி மூள அரவங்கை நாணும்
அனல்பாய நீறு புரமா
மலைசிலை கையில் ஒல்க வளைவித்த வள்ளல்
அவனும் நமக்கோர் சரணே.

( நிலை வலி - ஓரிடத்தில் நிலைபெறும் திண்மை. நிதனம் - அழிவு. அலை நலிவு அஞ்சி - அலைக்கின்ற துன்பத்திற்கு அஞ்சி. அரணம் புக - அடைக்கலமாக அடைய. 'அனல் பாய்தலால் புரம் நீறாகும்படி அரவாகிய நாணிடத்தில் வாளி மூள, மலை சிலையாகிக் கையில் ஒல்க (வளைய) வளைவித்த வள்ளல்' என்க. நாண் கையால் இழுத்துப் பூட்டப்படுதலின், 'அங்கை நாண்' எனப்பட்டது. உம்மை சிறப்பு. )

இவ் அருமைத் திருமொழியை உணர்ந்து மலை வில் வள்ளலைச் சரணாக அடைந்து வாழ்வில் வெற்றி பெறுதலே மக்கள் செயத்தக்கதாம்.

# அறவழி அண்ணல்

உலகில் பிறந்த உயிர்கள் யாவும் வாழ்கின்றன; பின் மறைகின்றன. மக்களும் அவ்வாறே வாழ்கின்றனர்; மறைகின்றனர். அங்ஙனம் மறைந்தவர்கள் உலகில் எண்ணற்றவர்கள். அவர்கள் மறைவுக்குப் பின்னர் அவர்களைப் பற்றியோ அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியோ நினைப்பவரோ அறிபவரோ ஒருவரும் இல்லை. ஆயினும், அருமையாக எங்கோ எப்பொழுதோ ஒருசிலர் மறைந்தும் மறையாது என்றும் வாழ்பவராகின்றனர். மன்னு உலகமாகிய இதனுள் என்றும் மன்னி வாழ்பவராகிய இவர்களை, 'வித்தகர் - திறமையாளர்' என வியக்கின்றார் திருவள்ளுவர். "நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும் - வித்தகர்க் கல்லால் அரிது" என்பதில் அவ்வியப்பினைக் காண்கின்றோம். அத்தகைய வித்தகர் ஒருவரை நம் இந்தியநாடு அண்மையில் பெற்றுச் சிறப்புற்றது. அவரே தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் நம் நாட்டு நலத்திற்கென்றே ஆக்கிய அண்ணல் காந்தியடிகள்.

நாட்டை அயலவரது அடிமைத் தளையினின்று மீட்க மறநெறியை - குருதி வெள்ளம் பெருகும் போர்முறையை - நாடாது அறநெறியில் நின்று வெற்றி பெற்றமையே இவரது அரும்பெரு வித்தகமாகும். அறநெறியில் இவருக்கிருந்த உறுதிப்பாடு அசைக்க ஒண்ணாதது. பல்வகை அறங்களில் வாய்மை (சத்தியம்) இன்னா செய்யாமை (அகிம்சை) என்னும் இரண்டுமே தலையாயவை.

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்பன வள்ளுவர் வான்குறள். இவ்விரண்டறங்களையும் இவர் இடையறாது போற்றி வந்தமையே இவரது ஈடும் எடுப்பும் இல்லாப் பெருமைக்கு ஏது. உள்ளத்தால் பொய்யாது ஒழுகினமையால் இவர் இன்று உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ளவராய் வாழ்கின்றார். "கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா - செய்யாமை மாசற்றார் கோள்"

என்றும், "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்–என்ன பயத்ததோ சால்பு" என்றும் கொண்டு ஒழுகிவந்த இவரது நெறியையே இன்று உலகம் நாடிநிற்கின்றது. உழவாரப் படையாளராகிய அப்பரும், 'மெய்ம்மையாம் உழவையே செய்யவேண்டும்' என்கின்றார்.

ஆசையும், அழுக்காறும், பகையும், போரும் நிறைந்த இவ்வுலகிற்கு அறவழி காட்டிய அண்ணல் நம் காந்தியடிகள். இவரது நூற்றாண்டு விழா இன்று நமது நாடெங்கிலும் பல்வகைச் சிறப்புக்களுடன் நன்முறையில் கொண்டாடப் படுகின்றது; பிற நாடுகளிலும் பெருமையுற்றுத் திகழ்கின்றது. புகழ்மாலை சூட்டுதல், நினைவுச் சின்னங்கள் அமைத்தல், நூல் வெளியீடு செய்தல் முதலியவற்றுடன், இவர் காட்டிய வாய்மை, இன்னாசெய்யாமை என்பவற்றைக் கடைப் பிடித்து, வேற்றுமையையும், வன்முறைச் செயல்களையும் விடுத்து, ஒருமைப்பாட்டையும், நன்முறைச் செயல்களையும் கைக்கொள்வோமாயின், அதுவே நாம் அறவழி அண்ணலாகிய நம் காந்தியடிகட்குச் செலுத்தும் உண்மைப்புகழ் அஞ்சலியாகும். அவ்வாறு செய்யச் சூள் ஏற்போம். அவரது நூற்றாண்டு விழா அனைத்துலகிற்கும் அறவழி விளக்காக அமைந்து, அன்பையும், அமைதியையும் நிலவச் செய்வதாக!

வாழ்க அடிகள் புகழ்! வெல்க அறநெறி!

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil

I with my family visited the famous temple of Lord Vaithisvara. The renovation of Kumbabhishekam done recently is wonderful. The Lord grace is for all and for TamilNadu. The temple administration is carried out in superable manner and it is praise worthy.

(Sd.) P. Lokanathan,

13—7—69. Divisional Engineer (H. & R. W.)

on leave.

உ
குருபாதம்

குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

## கல்வி கேள்வி அறிவு

அருள்நெறியில் உலகியல் நோக்கு இல்லை எனச் சிலர் கருதுவர். அவ்வாறில்லை. 'உலகியல் பலவும் அருள்நெறியைக் குறிக்கோளாகக் கொண்டனவாயிருத்தல் வேண்டுமல்லது, உயிரின்பத்தையே பயனாகக் கொண்டிருத்தல் கூடாது' என்பதே அருள்நெறிக்கொள்கை. இக்கொள்கையையுடைய அறநூலே உண்மை அறநூலாம்.

உலகியலில் முதன்மையானது அரசியல். அது நன்கமைதல் வேண்டும் என்பது அருள்நெறியிலும் வற்புறுத்தப் படுவது. "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் - வீழ்க தண்புனல்" என்று அருளிய திருஞானசம்பந்தர், "வேந்தனும் ஓங்குக" என அரசனையும் வாழ்த்தினர். அவரது அருள்வாழ்த்தினல் பாண்டிநாட்டு அரசன் அருளும், பொருளும் பெற்று ஓங்கியதேயன்றி, பிறப்பிலே அமைந்த உடற் கூனும் நீங்கப்பெற்று ஓங்கினன்.

'ஞானசம்பந்தர் அரசனை வாழ்த்தியது, மக்களது இம்மை மறுமை நலம் அனைத்திற்கும் முதலாயுள்ள திருக்கோயில் களையும், அவைகளில் நடைபெறும் நித்திய நைமித்திக வழி பாடுகளையும் செவ்வனே காத்தற்கு உரியவன் அவன் என்னும் கருத்தினலேதான்' என்பதைச் சேக்கிழார்,

"ஆளும் மன்னனை வாழ்த்திய தற்சனை
மூளும் மற்றிவை காக்கும் முறைமையால்"

என விளக்கினர்.

"அந்தணர் நூற்கும்.........ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்ற திருவள்ளுவருக்கும் கருத்து இதுவேயாதல் தெளியப் படும்.

திருமூல நாயனாரும் தமது திருமந்திர நூலுள் நாட்டை ஆளும் அரசன் நல்லவனாய் அமைதல் வேண்டும் என்கின்றார்.

வேந்தன் உலகை மிகநன்று காப்பது;
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்;
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தான்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே.

'அரசன் நாட்டை நன்முறையில் ஆள்வானேயாயின், மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்றபடி மக்களும் நன்முறையில் நிற்க, அவ்வாட்சி தனக்கும், பிறர்க்கும் மிக்க நன்மை பயப்பதாய் அமையும், அவ்வாறன்றி நாட்டைப் பகைவர் நலியத் தானும் நலிந்து கொடுங்கோல் செலுத்துவானாயின், கிடைத்த விலங்குகளை யெல்லாம் அடித்துக் கொல்கின்ற இரக்கம் அற்ற புலிபோல்பவனாய், நாட்டையும் இழப்பான்' என்பது இத்திருமந்திரத்தின் பொருள்.

" ஆக்களையும், பெண்டிரையும், துறவிகளையும், சிவனடியார்களையும் இடையூறின்றி வாழுமாறு காத்தல் அரசனுக்குத் தலையாய கடமை; அக்கடமையை அவன் ஆற்றாதொழியின், மறுமையில் அவனுக்குக் கிடைப்பது மீளா நரகம்" என அவர் கூறும் திருமந்திரம் இது;

ஆவையும், பாவையும், மற்றற வோரையும்,
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன்; காவா தொழிவனேல்,
மேவும் மறுமைக்கு மீளா நரகமே.

சிவாலயங்களே நாட்டிற்கு உயிராய் அமைந்தவை ஆதலின், அரசன் அவற்றில் நிகழ்தற்குரிய நித்திய நைமித்திகங்கள் தவறாது நடைபெறச் செய்தல் வேண்டும். செய்யாவிடில், அரசனும் பகைவரை வெல்லும் ஆற்றலை இழந்து, நாடும் பாழாகும் என்கின்றன பின் வரும் திருமந்திரங்கள்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழைகுன்றும் ;
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர் ;
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றனே.

முன்னவ னர்கோயிற் பூசைகள் முட்டிடின்,
மன்னர்க்குத் தீங்குள; வாரி வளங்குன்றும்;
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி;
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

சிறப்புப்பற்றிச் சிவாலயத்திற்குக் கூறிய இது, ஏனையதேவர் கோட்டங்கட்கும் ஒப்பதேயாம். பண்டைத் தமிழ்க்காப்பியங் களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவற்றிலும் அரசன் இந்திரவிழா எடுப்பித்த காலத்துச் சிவபிரான் கோயிலை முதன்மையாக வைத்து ஏனைத் தேவர் கோட்டங்கள் பலவற் றினும் விழா எடுப்பித்தமை சொல்லப்பட்டது.

'அரசன் தான் எச்சமயத்தவனுயினும் பல சமயத்தவரை யும் ஒப்ப நாடி அவரவரை அவரவர் சமய நெறியினின்றும் வழுவாதொழுகச் செய்தல் அவனுக்குரிய நெறிமுறை' என் பதைத் திருமூலர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

" தத்தம் சமயத் தகுதிநில் லாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்ட மும்செய்யும் அம்மையில்; இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே."

இதனல் சமயிகள் பலரும் பிற சமயத்தைப் பழிப்பதில் தம் கருத்தைச் செலுத்தாது, தம் சமயநெறி நிற்றலில் கருத்தைச் செலுத்தல் வேண்டும் என்பது நன்கு புலனுகும்.

இவ்வாறு தனது கடமைகள் இவை என்பதை நன்கு உணர்ந்து செய்தற்கு அரசன் சிறந்த கல்வியுடையவனுதல் வேண்டும் என்கின்றார் திருமூலர். கல்வியில்லாத அரசன் காலனுக்கு நிகராவான் – ஏன் ? காலனையே ஒரு வகையில் நல்லவன் எனலாம். ஏனெனில், காலன் கொடியவர்களைத் தான் துன்புறுத்தி நரகத்தில் இடுவான்; நல்லவரை நலிய

மாட்டான். கல்லா அரசனே நல்லவர் இவர்; தீயவர் இவர் என்பது அறியாமல் அனைவரையும் துன்புறுத்துவான். அதனால், கல்லா அரசன் காலனிலும் கொடியவன் என்று கல்வியை வற்புறுத்துகின்றார் திருமூலர்:

“ கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்;
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்;
கல்லா அரசன் அறம்ஓரான், கொல்லென்பான்;
நல்லாரைக் காலன் நணுகிநில் லானே.”

திருவள்ளுவர் கல்வியை அரசியலில் வைத்து வலியுறுத்தியிருத்தல் யாவரும் அறிந்தது.

அரசன் கல்வியுடையனாதல் இன்றியமையாததாயினும், கல்வி அனைவர்க்கும் வேண்டற்பாலதே; கல்வி உலகினுக்கு மட்டுமன்று; இறைவன் திருவருளைப் பெறுதற்கும் இன்றியமையாததே என்றும் திருமூலர் கூறுவதைக் காணலாம்.

நில்லா நிலையை நிலையாக நெஞ்சினுள்
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள் !
எல்லா உயிர்க்கும் இறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணஒண் ணாதே.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது;
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று;
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாரம்;
கல்லாத மூடர் கருத்தறி யாரே.

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்;
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறின்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே.

“ கல்லார் நெஞ்சின் - நில்லான் ஈசன் ” என்று திருஞானசம்பந்தரும் அருளுதல் காணலாம்.

கல்வியே யன்றிக் கேள்வியும் வேண்டற்பாலது என்பது திருமூலர் அறிவுரை.

அறம்கேட்டும், அந்தணர் வாய்மொழி கேட்டும்,
மறம்கேட்டும், வானவர் மந்திரங் கேட்டும்,
புறம்கேட்டும், பொன்னுரை மேனிஎம் ஈசன்
திறம்கேட்டும் பெற்ற சிவகதி தானே.

'சிவகதி கிடைப்பது, முதலில் அறம் இது, மறம் இது என்று கேட்டும், பின் அந்தணர்களது வேதத்தின்வழித் தெய்வத் துதிகளைக் கேட்டும், பின்னர்த் தமக்கு விருப்பமான தெய்வத்தை வழிபடும் மந்திரம் முதலிய முறைகளைக் கேட்டும், பின்னர் இம்மை மறுமைகளைப் பயக்கும் விரதம் முதலியவற்றைக் கேட்டும், கடைசியாகப் பொன்னுர் மேனியனுகிய சிவபெருமானது அருட்டிறங்களைக் கேட்டும் உணர்வதனுலேயே' என்பது மேற்குறித்த திருமந்திரத்தின் பொருள்.

" தேவர் பிரானைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார்? அறிந்தபின்
**ஓதுமின்; கேண்மின்: உணர்மின்: உணர்ந்தபின்**
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் முரே"

என்பதிலும் கேள்வி வற்புறுத்தப்படுகின்றது. 'கற்றல், கேட்டல் இரண்டையும் உடையவரே பெரியார்' என்பது திருஞானசம்பந்தர் வாக்கிலும் காணப்படுவது.

கல்வி கேள்விகளின் பயன் அறிவேயாதலின், அதனைப் பெற்றவரே எல்லாம் பெற்றவர் என்பதைத் திருமூலர் திருமந்திரம்,

" அறிவுடை யார்நெஞ் சகலிட மாவது;
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது;
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் முனே"

என வெளியிடுகின்றது. "அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் - என்னுடைய ரேனும் இலர்" என்னும் திருவள்ளுவர் திருக்குறளை அறியாதவர் இல்லை.

யாவராலும் விரும்பப்படுவது அறிவும், வெறுக்கப்படுவது அறியாமையும் என்பது வெளிப்படை. ஆயினும், தன்னை அறிந்து பின் தலைவனை யறியும் அறிவே உண்மை அறிவு என்பதையும், அவ்வறிவுக்குத் தடையாய் நிற்பதே உண்மை அறியாமை என்பதையும் பலர் அறிவதில்லை. அந்நிலையில் அறிவு அறியாமைகளைச் சிறிதளவில் அறிந்து நிற்பது உலகியலாம், ஆகவே திருமூலர்,

" அறிவறி வென்றங் காற்றும் உலகம் ;
அறிவறி யாமை யாரும் அறியார் ;
அறிவறி யாமை கடந்தறி வானல்,
அறிவறி யாமை அழகிய வாறே "

எனவும்,

" என்னை யறிந்திலேன் இத்தனை காலமும் ;
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன் ;
என்னை யறிந்திட் டிருத்தலும் கைவிடாது
என்னையிட் டென்னை உசாவுகின் ருனே "

எனவும் கூறுகின்ருர். ஆகவே. அருள்நெறியில் பெரிய அளவில் அமைந்துள்ள அவைகளே அறநெறியில் ஓரளவில் அமைந்துள்ளன என்பதை உணர்ந்து, அவற்றை மக்கள் முறையே பற்றியொழுகிப் பயனடைவார்களாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

The temple has been recently renovated. It is full of holiness and one feels one with God in the holy environment.

(Sd.) S. Sundaram,
19—7—69. Superintendenting Engineer, Highways,
Trichy.

தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

## சமுகத்திற்கு வேண்டுகோள்

நல்லவுரை கேட்டுமகிழ் சுப்ர மண்ய
நற்குருவே தேசிகனே தருமை வாழ்வே
வல்லமைசேர் சொக்கலிங்கம் அருளி னாலே
வந்துநுமைக் காணவந்தேன் வெறுத்தி டாதே
கல்லாதான் பெரும்பிழையன் எனவே யெண்ணிக்
கற்பகமே கற்கண்டு கலந்த தேனே
பல்லோர்கட் குதவிபுரி ஞான மூர்த்தி
பாரினிலே பல்லாண்டு பெற்று வாழ்க.

சென்ற வருடத்தில் சேர்நூற்றிற் பாதிதனை
நன்றாகப் பெற்றே நலமுற்றேன் — இன்றுதிரு
நெல்வேலி காண நினைக்கின்றேன் சற்குருவே
எல்லாம் கொடுக்கவே எண்.

சுட்டுணர்விற் கெட்டாத சுடரே போற்றி
தூயநெறி தனில்வாழும் சுப்ர மண்ய
நட்புகொண்ட குருவகத்தில் வாழ்வாய் போற்றி
ஞாலமதில் ஒளிக்கொளியாய் இருப்பாய் போற்றி
பிட்டுகொள மண்சுமந்த பெரியாய் போற்றி
பேருலகில் ஒருபொருளாய் நிற்பாய் போற்றி
கட்டமெலாம் வாராமற் காப்பாய் போற்றி
கைலைமலை தருமபுரம் மேவுங் கோவே.


*மீனாக்ஷிசுந்தர தேசிகர்.*

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்
மகாகும்பாபிஷேக விழாவில்



சிறந்த முறையில் பணியாற்றிய, தமிழக அரசு, காவல்துறை அதிகாரி,
திரு. R. M. மகாதேவன் அவர்கட்குத்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பொன்னாடை போர்த்தி ஆசி வழங்குதல்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்
மகாகும்பாபிஷேக விழாவில்



சிறந்த முறையில் பணியாற்றியதைப் பாராட்டி
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்
தமிழக அரசு, காவல்துறை அதிகாரி,
திரு. R. M. மகாதேவன் அவர்களிடம்
வெள்ளிப் பாராட்டுக் கேடயத்தை வழங்குதல்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்
திருப்பணிக்காகப் புதிதாக வைக்கப்பெற்ற உண்டியலை



தஞ்சை, அறநிலையத்துறைத் துணை ஆணையர்,
திரு. *T. N.* சிங்காரவேல் B. A., B. L., அவர்கள்
வெண்பொற்காசுகளைப் போட்டுத் தொடங்கிவைத்தல்.

திருவையாறு

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

# கோடி அர்ச்சனை

"பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான்
நாவில் நூறு நூறாயிரம் நண்ணினர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்க ளாவரே." —அப்பர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளக்குறிப்பின் வண்ணம் திருப்பணி தொடங்கப்பெற்று நடைபெற்று வருகிறது. அவ்வாலயத் திருப்பணி விரைவில் நிறைவுறவும் உலகம் நலமுறவும் திருப்பணிக்கு நிதி உதவி கிடைக்கவும் பிரார்த்தனை செய்யும் முறையில் ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமிக்கும் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாளுக்கும் கோடி அர்ச்சனை தொடங்கி நடைபெற்று வருவதில் சுமார் இரண்டுலக்ஷத்திற்கு மேல் அருச்சனை நடைபெறுகிறது. அன்பர்கள் பலர் பங்கு கொண்டு பயன் பெறுகின்றனர்.

அர்ச்சனை செய்யும் முறையும் கட்டண விபரமும்

| | | | |
|---|---|---|---|
| சுவாமி அர்ச்சனை 1<br>அம்பாள் அர்ச்சனை 1 | | ஆக இரண்டுக்கு ரூ. | 20—00 |
| சுவாமி அர்ச்சனை 5<br>அம்பாள் அர்ச்சனை 5 | | ஆக பத்துக்கு ரூ. | 100—00 |
| சுவாமி அர்ச்சனை 10<br>அம்பாள் அர்ச்சனை 10 | | ஆக இருபதுக்கு ரூ. | 200—00 |
| சுவாமி லக்ஷார்ச்சனை 1<br>அம்பாள் ,, 1 | 750—00<br>750—00 | ஆக இரண்டுக்கு ரூ. | 1500—00 |

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி
தேவஸ்தானம்
திருவையாறு
12—9—69.

உத்தரவுப்படி,
சோமசுந்தரத் தம்பிரான்

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

**வித்துவான். திருமதி. ப. நீலா**

(மலர் 28, இதழ் 10, பக்கம் 559 இன் தொடர்ச்சி)

## 22. யானை யெய்தது

கட்டவிழ் கடுக்கை யணிந்த கண்ணுதல் கல்யானை கரும்புண்ணச் செய்தது கண்டோம். இனி, பாண்டியன்மேல் அமணரேவிய யானையை விழும்படிச் செய்த அற்புதங் காண்போம்.

விக்ரம பாண்டியன் தன் வெலற்கரிய செங்கோலை எண் திசையிலும் செலுத்தி வருகிறான். கலியும் பகையும் ஒதுங்க, புத்தம், சமணம் போன்ற களை களைந்து மறையாகம நெறியான வைதிகச் சைவப் பயிரை நன்கு வளர்க்கின்றான். தன் தந்தை பணிந்த சித்த மூர்த்திகளுக்கு மதுரைக் கோயிலின் வடபக்கம் ஆலய மொன்றும் அமைத்தான்.

### செம்பியன் கொண்ட சினம் :

விக்கிரம பாண்டியனின் சீரும், செங்கோல் திறமுங்கண்ட செம்பியன் ஒருவன்-காஞ்சி நகருள்ளான், பொய்யமணர் கட்டுரைவழி யொழுகுபவன், மையில்மதி மாறனொடு மாறுபாடு கொண்டான். அவனோடு நேரே பொரலாற்றாது சனமிகு வஞ்சனையால் வெல்ல நினைத்தான்.

தன் கருத்தைச் செயலாக்க அஞ்சனம், கிரௌஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், குஞ்சரம், சையம், ஏமகூடம், விந்தம் என்னும் எட்டுமலைகளிலும் வாழும் சமணர்களின் தலைவர்களுக்குத் தனித்தனியே ஓலையனுப்பினான். தம் வடிவு போல் உள்ளமும் மாசடைந்த அமணர்கள் எண்ணாயிரவரும் செம்பியன் ஓலைகண்டு சிந்தை களித்தனர். பின்னர் யாவரும்

ஒருங்குகூடி இருள்வழிக்கொள்வதேய்ப்பக் காவல் வல்லரணஞ் சூழ்ந்த காஞ்சிமா நகர்வந்தெய்தினர். பூவலர் தாரான் கோயில் புகுந்து மன்னவன் முடிமேல் பீலிவைத்து ஆக்கங் கூறினார்கள்.

**நோக்கங் கூறி நிம்மதி கொண்டான் :**

தன் எண்ணங்கூறத் துணிவுகொண்டு வசிய முன்னூறும் வல்லீர்! என விளித்தான். வசியம், வயத்தம்பம், வாதம் அதிரிசியம் அஞ்சனம், ஆகருஷணம் என்ற சித்து வேலைகளை இவர்கள் நன்கு கற்றவர்கள். இவைகளில் வல்லவராக சிவ பெருமான் விளங்கியதை நாம் 'எல்லாம் வல்ல சித்தரான பட லத்தில் கண்டோமல்லவா! தென்னவனை அபிசாரயாகம்செய்து அழிப்பதே என் எண்ணம். நீங்கள் அதனை நிறைவேற்றினால் என்நாட்டில் பாதி நுங்களுக்காகும் - என்றான் வளவன். தவம் புரிந்து அவமே செய்யும் சமணர்களும் அதற்குடன்பட்டனர்.

**அபிசாரத்தில் வந்த அத்தி :**

நிவந்த தெண்திரை நீர்ப்பாலியாற்றங்கரையில் மூன்று காத நீளமும் யோசனை அகலமுங் கொண்ட ஓர் அவம்படு வேள்விக் குண்டத்தைக் கோணமெட்டாகக் கண்டனர். விடம் பொதிந்த விறகுகளை (சமித்து) அதனுளிட்டு வேப்பநெய் வார்த் தனர். விடங்கொண்ட பிராணிகளின் ஊனை எண்ணெய் ஊறும் கறிப்பொடி தூவி குண்டத்துள் இட்டனர். கொல்லாத விரதம் பூண்டோர் இப்படிக் கொடும்பழி வேள்வி செய்தனர்.

வேள்விக் குண்டத்திலிருந்து அஞ்சனக் குன்றமொன்று அசைவதுபோல நால்வாயும், ஊசலாடும் ஒற்றைக் கரமுங் கொண்ட ஒரு களிறு எழுந்தது. அதனிடம் பொங்கிய மத நீரால் அவ்வேள்வித் தீயே அவிந்தது.

**தென்திசை ஏவினர்கள் :**

பழிக்கஞ்சாப் பாதகர்கள் அந்த மாகளிற்றை நோக்கி 'நீ போய் வழுதியை மதுரையோடுஞ் சிந்தவே தொலைத்தி! - என்று தென்திசை ஏவினர்கள்.

அருளற்றிரு ளுடலிற்புதை யமணக்கய வர்களுட்
டெருளற்றரு மறையிற்படர் செயலற்றிக பரமெய்ப்
பொருளற்றவ னிகத்தொடு புறமொய்த்திட மதமா
வெருளற்றிடி குரலிற்படி வெடிபட்டிட வருமால்.

என்று பரஞ்சோதியார் அழகுமிகுந்த சந்தத்தில் களிறேகுங் காட்சியை வருணிப்பார்.

வருகின்ற களிறு புயலின் வயிற்றைக் கிழித்து இடி ஏழினையும் உதிர்க்கும், கடல் கலக்கும் தனிப்பெருமத்தெனச் சுழன்றுவருங் களிற்றைக் கண்டு வடவைக் கனலோ - என அஞ்சினர் மக்கள். அதன் பிளிறொலியால் திசையிலுள்ளார் காதுகள் செவிடாயின. வேகத்தொடு வருகின்ற இந்நாகத்தால் என்ன கேடுவருமோ - என்று வெதும்பிய மதுரை நகரத்தார் தென்னவனிடம் சென்று முறையிட அவனும் 'சுழிபட்டலை புனல் போல்' உளங்கவன்றான்.

## தேவாதி தேவனே சரணம் :

செய்வதறியாது திகைத்த பாண்டியன் மைப்போதகம் தாங்கிய மணிக்கோயிலுக்கு வந்தான். முன்னே கைப்போதகம் (யானை) உரித்தானின் காற்போதகங்களைத் (மலர்) தாழ்ந்து வணங்கி இப்போது இப்போதகந்தனையும் தொலைத்து எங்களைக் காத்திடுக-என் றிரந்தான். அப்போது அகல் வானிடை ஓர் அருள்வாக்கு எழுந்தது. மதுரை நகரின் கீழ்த்திசையில் ஓர் அட்டாலை மண்டபமொன்று அமை. (பரண் வடிவு கொண்ட மண்டபம்) நாம் அங்கே விட்டார் வலிகெட விற்சேவகராக வருவோம் - என்றான் கண்ணுதலவன்.

சொன்னபடியே அந்த அட்டாலை மண்டபத்திற்கு வந்தான் பிறைமுடித்த பெருமான். கருங்கடலில் முளைத்த கதிர் போன்ற கச்சில் வாயுடை வாளைக்கட்டி, காலில் வீரக் கழல் பூண்டு, வாளிப் புட்டிலைத் தோளில் தொங்கவிட்டு, தடக்கையில் வில் தாங்கி விரைந்து வந்தான். அவனது கருத்ததோற்றம்

'பாங்குறை இமயப்பாவை பாதியேயன்றி முற்றும்
வாங்கிய வண்ணம் போன்ற' — இருந்தது.

அல்லது 'மாலும் ஓர்பால் ஓங்கிய வண்ணம் போன்றும்' ஒளிநிறம் பசந்து காட்டினான் இறைவன் என்கிறார் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்.

## சோழன் எண்ணம் சிதைந்தது :

குவலயம் வெடிபட வரும் குஞ்சரத்தைத் தொலைவில்கண்ட போதே அறனில்லாதானின் கொடுங்கோல்போல் - தன் வில்லை வளைத்து அம்பை விட்டான். மங்குலின் முழங்கிய வேழம் - சென்னிபிளந்து பூமியில் விழுந்தது. யானையின் பின்னே வந்த கூற்றத் தூதர்களாம் அமணர்கள் முதுகிட்டு ஓடினர். இயமன் ஏறிவந்த எருமையென யானை கீழே விழுந்தது. பாண்டியன் பார்ப்பனச் சிறுவனை (மார்க்கண்டேயன்) ஒத்தான்.

புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணியமூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்ற மொத்தது மத்த யானை
சுதைபடு மதிக்கோ வேந்தன் றொழுகுலச் சிறுவ னொத்தான்
பதைபடு மமணர் கால படரெனப் படரிற் பட்டார்.

விக்ரமன் வேண்டிக்கொண்டதற்கிணங்க அவ்வடிவத்தோடு அங்கேயே நின்றருள்புரிந்தான் ஐயன். இராஜசேகரனைப் பெற்று மகிழ்ந்த பாண்டியன் பின்னும் மேதினியைச் சீருடன் புரந்தான். இவ்விறைவனை உரோமசன், பிரகலாதன் போன்றோர் வழிபட்டு இன்புற்றனர். (வளரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I am very happy to visit Vaithisvarankoil and to pay respects to the Lord here. The Renovation has been done so very well and I am sure this will keep up the old tradition and glories of this temple of the South.

(Sd.) V. T. Narayanan,
General Manager, Southern Railway
20th August 1969.

# கேது

வேதாந்தசிரோமணி

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

நவக்கிரஹங்களில் கடைசியானது கேது. இது அந்த்ய க்ரஹாய நம: என்று அஷ்டோத்திர சதநாமாவில் உள்ள நாமத்தால் உணரப்படும். கேது என்பது ஒரு கிரஹமில்லை. பல கிரஹங்கள் அதில் அடங்கியுள்ளன. அதனுல்தான் சிற்சில இடங்களில் கேதுகணம் என்று குறிப்பிடப்படுகிறது. பிரஹத் ஸம்ஹிதையில் கேதுக்கிரஹங்களில் உள்ளவை 101. அவற்றுள் 16 மிருத்யுவின் மூச்சினின்றும் உண்டானவை. 12 குரியனிடமிருந்து தோன்றியன 10 தக்ஷனுடைய யாகத்தை நாசம் செய்தபொழுது ஸ்ரீ ருத்திரனுடைய கோபத்தினின்றுமுண்டானவை. 7 பிதா மஹனிடமிருந்து உண்டானவை. 15 உத்தாலகர் என்ற மகர்ஷியின் புதல்வர். 17 மரிசி, கச்யபர் இவர்களின் நெற்றியிலிருந்து உண்டாயின. 5 பிரஜாபதியின் சிரிப்பிற் ரேன்றியன. 3 அக்னியிற் ரேன்றியன. புகையிலிருந்து உண்டானது ஒன்று. அமிர்தம் கடையும்பொழுது சந்திரனுடன் தோன்றியவை 14. பிர்மாவின் கோபத்திலிருந்து தோன்றியது ஒன்று ஆக 101 என்று கூறப்பட்டிருக்கிறது கர்க்கர் என்ற மகர்ஷி கேது "1000" எண்ணுடையது என்று கூறுகிருர். நாரதமுனிவர் கேது ஒன்றே ஆயினும் அது பல ரூபங்களை அடைகிறது என்று சொல்லுகிருர்.

இவர் இரண்டு கைகளுடன் கழுகு வாகனத்தில் இருப்பதாக மந்திரத்தின் தியானம் கூறும். அவசத்திற்குரிய தியானமோ இரண்டு கைகளிலும் வரத முத்திரையும் கதையும் தரித்து புரு வாகனத்தில் ஏறி மேருவை இடம் வருவதாகச் சொல்லப்படுகிறது. ஸ்தூல சிரஸே நம: மஹாசிர்ஷாய நம: என்ற பெயர்களால் பெரிய (பருத்த) தலையுடையவன் என்று கூறப்படினும், மூன்று அல்லது ஐந்து படங்களுடன் கூடிய பாம்புத் தலையுடனேயே ஆலயங்களில் காணப்படுகிறது. நவக்கிரஹ ஆராதனக் கிரமத்தில் அபிஜித் நக்ஷத்திரத்தில் பிறந்தவனுகக் கூறப்படினும், சித்ரா ப்ரஸூதாய நம: (53) என்ற நாமத்தினுல் சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தவனுகக் கூறப்படுகிறது. கேதுவிற்குரிய

விரதத்தில், கேதுவைப் பூசித்து, அந்த கும்பம் வஸ்திரம் பிரதிமை முதலியவற்றைச் சித்ரா நக்ஷத்திர தினத்தில் தானம் செய்யவேண்டும.

"कुम्भादिभिश्च संयुक्तां चित्रातारे प्रदापयेत्"

என்று கூறுவது கேது சித்திரையில் தோன்றியவன் என்பதை வலியுறுத்துகிறது.

ராகுவும் கேதுவும் விஷ்ணுவினுல் துண்டிக்கப்பட்ட ஒருவரே ஆயினும், துண்டிக்கப்பட்ட பிறகு வளர்த்தவர்களின் கோத்திரத்தால், ராகுவிற்கு பைடீனஸ கோத்திரம் என்றும், கேதுவிற்கு ஜைமினி கோத்திரம் என்றும் கூறுவர். அதுபோலவே துண்டிக்கப்பட்டவுடன் விழுந்த தேசத்தின் வேறுபாட்டால் ராகுவிற்கு பர்பரதேசம் என்றும் கேதுவிற்கு அந்தர்வேதி தேசம் என்றும் கூறுவர்.

கேதுவிற்கு உரிய தான்யம் - கொள்ளு, சமித்து - தர்ப்பம், ரத்னம் - வைடூர்யம், வஸ்திரம் - சித்ரவர்ணம் (பலநிறம்), புஷ்பம் - செவ்வல்லி, அதிதேவதை - சித்ரகுப்தன், பிரத்யதி தேவதை - பிர்மா. என்று கொள்ளவேண்டும். செவ்வாயைப் போல் கேது என்று கூறுவதால் கேதுவையும் பாபக்கிரஹமாகவே கொள்ளவேண்டும்.

ஜ்யோதிடர் - அதிசாரம், வக்ரகதி முதலியன இன்றி ராகுவும் கேதுவும் $1\frac{1}{2}$ ஆண்டுக்கு ஒரு ராசி விதம் மேருவை இடமாகச் சுற்றிவருவர். பஞ்சாங்கம் கணிப்பவர்களுக்கு இவர்களின் கணனம் கொஞ்சம் எளிது. அச்வினி மகம் மூலம் இந்த நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதலில் கேதுதெசை வருடம் ஏழு. கேதுவை மாதாமஹ காரகன் என்றும் ஞானகாரகன் என்றும் கூறுவர். சனி, சுக்ரனுக்கு நண்பன். த்வஜா (கொடி)கார மண்டலத்தில் இருப்பதாகக் கூறினும், விரதத்தில் "குளுத்த தரன்யே விலிகேத் ஷட்கோணம் மண்டலம் சுபம்" என்று அறுகோண மண்டலம் கூறப்பட்டிருக்கிறது. புரந்தர ரிஷி கண்ட கவச ஸ்தோத்திரமும், வாமதேவரிஷி கண்ட கேது ஸ்தோத்திரமும், மதுச்சந்தரிஷி கண்ட "கேதும் க்ருண்வன்" என்ற மந்திரமும் பிரஸித்தமாயுள்ளன; கராளவதனன், ரக்தலோசனன், பிங்களாக்ஷன், ஞானதாயகன், கபிலாக்ஷன், காலாக்னிஸந்நிபன், ஹிமகர்ப்பன், தூம்ரவர்ணன், கிருத்தகண்டன், நரபீடகன், ஸ்ரீகண்டன், கதாதரன் என்ற பன்னிரண்டு நாமங்களைத் தினம் காலையில் நினைப்பவர் நற்பயனை அடைவர்.

கேது தசையில் உண்டாகும் துன்பங்களை நீக்க, உமா சம்ஹிதையில் கூறப்பட்ட வால்மீகி ராமாயண பாராயணமுறை வருமாறு.

கேது தசைக்கு அயோத்தியா காண்டம் 50 ஆவது சர்க்கம் பாராயணம் செய்து முதலில் தேங்காயும், கடைசியில் நெய்யிற் செய்த உளுத்தம் வடையும் நிவேதனம் செய்யவேண்டும்.

கேது தசையில்

கேது புத்திக்கு அயோத்தியா 22 ஆவது சர்க்கம் தேங்காய் நிவேதனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சுக்ர | ,, | சுந்தர | 65 | ,, | ,, | கற்கண்டு | ,, |
| சூரிய | ,, | அயோத்யா | 110 | ,, | ,, | கரும்பு | |
| சந்திர | ,, | பால | 22 | ,, | ,, | பால் | |
| குஜ | ,, | அயோத்யா | 100 | ,, | ,, | ச. பொங்கல் | ,, |
| ராகு | ,, | யுத்த | 67 | ,, | ,, | தேன் | |
| குரு | ,, | ,, | 116 | ,, | ,, | வாழைப்பழம் | |
| சனி | ,, | ,, | 58 | ,, | ,, | நாகப்பழம் | |
| புத | ,, | ,, | 129 | ,, | ,, | திராக்ஷப்பழம் | |

மற்ற கிரஹங்களின் தெசையில் கேது புக்திக்குப் பரிஹாரம் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரிய | தெசையில் | ஆரண்ய | 68 | ஆவது | சர்க்கம் |
| சந்திர | ,, | ,, | 6 | ,, | ,, |
| செவ்வாய் | ,, | யுத்த | 116 | ,, | ,, |
| ராகு | ,, | பால | 76 | ,, | ,, |
| குரு | ,, | சுந்தர | 61, 62 | ,, | ,, |
| சனி | ,, | கிஷ்கிந்தா | 6 | ,, | ,, |
| புதன் | ,, | சுந்தர 14 ஆவது சர்க்கம் | | | |
| சுக்ர | ,, | யுத்த 19, 20, 21, 22 | | ,, | ,, |

கேது புக்திக்காகச் செய்யப்படும் பாராயணத்தின் முடிவில் தேங்காய் நிவேதிப்பது சிறந்தது. இதுவரையில் எழுதிவந்த கட்டுரைகளில், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் ஆகிய நான்கு கிரஹங்களின் தசாபுக்தி பரிஹாரமான ராமாயண பாராயணமுறை எழுதப்படவில்லை, தேவையுள்ளவர் உமா சம்ஹிதையில் கண்டுகொள்ளவும்.

**கேது காயத்ரீ:**

1. சித்ரவர்ணாய வித்மஹே பஹுரூபாய தீமஹி
   தன்ன: கேது: ப்ரசோதயாத்.
2. ஜைமினி கோத்ராய வித்மஹே தாம்ரவர்ணாய தீமஹி
   தன்ன: கேது: ப்ரசோதயாத்

केतुर्जैमिनिगोत्रजः कुशसमि द्वायव्यकोणे स्थितः
चित्राङ्क ध्वजलाञ्छितो हि भगवान् याम्याननः शोभनः
सन्तुष्टो गणनाथ पूजनवशाद्गङ्गादि तीर्थप्रदः
षट्त्रिस्थः शुभकृच्च चित्रिततनुः कुर्यात्सदा मङ्गलम् ॥

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

The temple with its numerous problems of maintenance, is in fact an institution that calls for a high degree of organisational abutty on the lay side. Any visitor to this temple is bound to be impressed by the enthusiastic devotion to duty shown by the persons in charge. On the religious side also. the persons concerned are deeply learned in their tasks, and the pleasure they takes in friendly the devotional ardour of the visitor makes this visits a memorable making it a keen desire on the part of the devotee to taste more and more of the Divine grace.

I wish them all the persons connected in this temple all the best, and may God shower on them this choicest blessings.

With my humble troubles,

(Sd.) D. Chandrasekaran.
Deputy Accountant General AG's Office
Madras.

9—8—79.

# நான்கு

பேராசிரியர்

திரு, வ. பெருமாள் எம்.ஏ., பி.டி , எம். ஆர். ஏ. எஸ்.

(மலர் 28, இதழ் 10, பக்கம் 570ன் தொடர்ச்சி)

இலக்கியம் கற்போர்க்கு மனமகிழ்ச்சி மட்டும் அளித்தல் போதாது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள்களையும் தருதல்வேண்டும். இந்நான்கையும் அடைவதே நூல் கற்றலின் நற்பயனாகும். இவ்வுண்மையைப் பவணந்தி முனிவர்

'அறம் பொருள் இன்பம்வீ டடைதல்நூற் பயனே'

என்று தாம் இயற்றிய நன்னூலில் தெளிவுபடுத்துகின்றார். இந் நான்கையும் மிகத் தெளிவாக வரையறுத்து ஒரே பாட்டில் இனிது விளக்குகின்றார் ஔவையார். இதோ அப்பாடல்:

'ஈதல் அறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

பகைவரிடமிருந்து நாட்டைக் காக்க வலிமைசான்ற படை இன்றியமையாததாகும். இன்று காலாட்படை (Army), கடற் படை (Navy), விமானப்படை (Air Force) என்று படையை முப்பெரும் பிரிவாகப் பிரித்துள்ளனர். ஆனால் பண்டைக் காலத்தில் படை நான்கு வகையாக அமைந்திருந்தது. அவை யாவன ; காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப் படை. இவற்றைப் நாற்படை என்பர். வடமொழியில் சதுரங் கம் என்பர். படை வகுப்பு, அணி, உண்டை, ஒட்டு, தூசம் என நான்கு நுண்ணிய முறையில் பகுக்கப்பட்டிருந்தது.

மகளிர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு நற்பண்புகளும் அமைந்திருத்தல் வேண்டும். நாடாளும் அரசனுக்கு நாற்படை இருப்பதைப்போல பெண்ணரசிக்கு இந் நாற்குணமும் நாற்படைபோல் திகழவேண்டும். இக்கருத்தைப் புகழேந்திப் புலவர் நளவெண்பாவில் இனிது விளக்குகின்றார். நாட்டைக்காக்கப் படைகள் மட்டும் இருந்தால் போதா. இயற்கையும் செயற்கையுமாய நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் ஆகிய நான்குவகை அரணும் செம்மையாக அமைந்திருத்தல் வேண்டும்.

" மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண் " (குறள்)

பெண்களுக்கு மேற்குறிப்பிட்ட நாற்குணமும் இன்றியமையாதனபோல ஆண்களுக்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி ஆகிய நான்கும் இன்றியமையாதன. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு. பண்பின் நிறைவாகிய மனச்செம்மை நிறை எனப்படும். ஓர்ப்பு என்பது உறுதி. இந்நாற்குணங்களையும் பெற்ற மனிதனது ஆன்மீக வாழ்க்கை பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நான்கும் மனித வரலாற்றில் ஆன்மீகப் படிகளாக அமைந்திருக்கின்றன.

இயற்கையை உற்றுநோக்குமிடத்துப் பல பொருள்களில் நான்கு பிரிவுகளைக் காணலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்று நிலம் நான்காகப் பிரிந்து அமைந்துள்ளது. எனவே, ஞாலத்தை நானிலம் என்று சொல்வதுமுண்டு. 'நானிலம் தன்னில் நாயகம் கல்வி' என்பது பழமொழி. பாலை என்று தனியாக ஒரு நிலம் இல்லை. கோடையின் வெப்பத்தால் முல்லையும் (காடு) குறிஞ்சியும் (மலை) மாறிப் பாலையாகத் தோன்றும்.

" முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும் " (11:64-66)

என்று சிலப்பதிகாரம் பாடுகின்றது. நானிலத்தில் மலர்கிற பூக்கள் நான்கு வகைப்படும். அவையாவன: கொடிப்பூ (கொடியில் பூப்பது). கோட்டுப்பூ (மரத்தில் பூப்பது), நீர்ப்பூ

(தண்ணீரில் மலர்வது), நிலப்பூ (செடியில் மலர்வது). கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று திசைகள் நான்காக அமைந்திருக்கவேண்டும். பக்திப்பெருக்கால் இறைவனை நெஞ்சம் உருகப் பாடிய தொண்டரடிப்பொடி ஆழ்வார் நான்கு திசைகளையும் நயம்படக் குறிப்பிட்டுள்ளார்.

"குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலு மாகண்டு
உடல் எனக்கு உருகு மாலோ என் செய்கேன் உலகத்தீரே"

- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

கிழக்கே மெய்ஞ்ஞானமும் மேற்கே விஞ்ஞானமும் ஓங்கி வளர்ந்துகொண்டிருக்கின்றன. இவ்விரண்டும் நன்கு இணைந்தால் உலகில் அமைதி நிலவும் என்பது ஒருதலை.

"சக்திவளருது மேற்கினிலே - ஆத்ம
சாந்தம் வளரும் கிழக்கினிலே
சக்தியுடன் ஆத்ம சாந்தமும் கூடினால்
சண்டைக் கிடமில்லை எண்டிசையும"

என்று யோகி சுத்தானந்த பாரதியார் இனிது பாடுகின்றார்.

கிழக்குக் காற்றிற்குக் கொண்டல் என்று பெயர். மேற்குக் காற்று கோடை எனப்படும். வடக்குக் காற்று வாடை, தெற்குக் காற்று தென்றல் என்று குறிக்கப்படும். இந்நால்வகை காற்றிலும் தென்றலே சிறந்தது; உயர்ந்தது; இனியது. தென்றலின் இனிமையைத் தமிழ்க் கவிஞர்கள் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளனர். பூஞ்சோலையில் நுழைந்த தென்றலின் இயக்கத்தைப் பரஞ்சோதி முனிவர் அகங்குளிரப் பாடுகின்றார். இதோ அவர் கவிதை:

"பொங்கரின் நுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங் கூட்டுண்டு குளிர்ந்துமெல்
லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்குமன்றே"

ஒரு பொருளைக் கணக்கிட்டு நுட்பமாக அளப்பதில் தமிழர்க்குத் தனித்திறமை உண்டு. 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்னும் பழமொழி தமிழரின் கணக்குணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. ஒவ்வொன்றாக எண்ணிக் கணக்கிடுகின்ற முறை எண்ணல் அளவை. ஒரு பொருளைத் தராசில் வைத்து எடைபோட்டுக் கணக்கிடுகின்ற முறை எடுத்தல் அளவை. எண்ணெய் முதலியவற்றை முகந்து கணக்கிடுகின்ற முறைக்கு முகத்தல் அளவை என்று பெயர். அடிகோலால் துணி முதலியவற்றை நீட்டி அளக்கின்ற முறை நீட்டல் அளவை என்று குறிக்கப்படும். 'கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகுமா ? 'வெறுங்கை முழம் போடுமா ?' ஆகிய இரு பழமொழிகளும் முறையே முகத்தல் அளவை, நீட்டல் அளவை ஆகியவற்றின் உண்மையையும் தொன்மையையும் இனிது விளக்குகின்றன. அளவையை நான்காகப் பிரித்திருப்பது போன்று மாத்திரையை நான்கு நுண்ணிய கூறுகளாகப் பிரித்திருந்தனர். நினைப்பதற்குக் கால் மாத்திரை; விரலை ஊன்றுவதற்குக் கால் மாத்திரை; இரு விரல்களையும் சேர்த்து முறுக்குவதற்குக் கால் மாத்திரை; விரலை விடுவதற்குக் கால் மாத்திரை. இவ்வாறு கைந் நொடிப்பொழுது அளவுள்ள மாத்திரையை நான்கு நுண்கூறுகளாகப் பிரித்து இருந்தனர் பழந்தமிழர்.

'உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே.'

மக்கள் தம் பேச்சிலும் எழுத்திலும் இழி சொற்களை அறவே நீக்கி நன்மொழியை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும். இழிசொற்கள் யாவை ? குறளை, பொய், கடுஞ்சொல், பயனில் சொல் என இழி சொற்கள் நான்கு வகைப்படும். இந்நான்கையும் நீதிநூல் அறிஞர்கள் மிகவும் கடிந்திருக்கின்றனர் குறளை (கோட் சொல்) நட்பை முறியடித்துப் பகைமையை உண்டாக்கி விடும். இடையன் 'புலி வருகிறது' என்று கூறிய கதை இங்கு நினைவு கூரத்தக்கது. கடுஞ்சொல் பிறர் மனத்தைப் புண்படுத்தி ஆறாத வடுவாக நிலைத்து விடும். இன்சொல் கனி போன்றது என்று வள்ளுவர் கூறிய கருத்துரை ஈண்டு நோக்கத்தக்கது. பயனில் சொல் பேசுவோர் நேரத்தையும், கேட்போர் நேரத்தையும் வீணாக்கிவிடும் விழலுக்கு இறைத்த நீர்போலவும், கடலில் கரைத்த பெருங்காயம் போலவும் பயனில் சொல் யார்க்கும் பயன்படாது ஒழியும். இந்நால்வகை இழி சொற்களையும் நீக்குவதே அறிவுடைமையாகும்.

( தொடரும் )

# பக்தி

சுசீந்திரம் திரு. நீலகண்ட சர்மா

பக்தி என்பது, தாயார், தந்தை உடன்பிறந்தார் பதி முதலிய உறவினரிடத்தும், தன் நாட்டைப் பற்றியும் கடவுளிடத்துமாகப் பலவகைப்படும். அவற்றில் கடவுளிடத்தில் மனிதன் வைத்திருக்கும் ஒருவிதமான அன்பு அல்லது ஈடுபாட்டைப்பற்றி மட்டும் தான் இங்குச்சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கடவுளை அடைய யோகமும் ஞானமும் போல் பக்தியும் ஒரு நேர்மையான வழியென்று உபநிடதங்கள் கூறுகின்றன. சரித்திரச் சான்றுகளும் கிடைக்கின்றன.

பக்தி என்பதுதான் என்ன? விபூதி முதலியன பூசிக்கொள்வதும் உருத்திராக்ஷம் முதலியன அணிந்துகொள்வதும் கோயில்களில் சென்று சிறிதுநேரம் ஹர ஹர, சிவசிவ, ராமராம என்று சொல்வதும் அர்ச்சனை முதலியன செய்விப்பதும் மட்டும்தானா?

பக்தர்களும் நாளடைவில் ஞானிகளாய் விடுகிறார்கள் என்று அறிகிறோம். அதற்கு முன்சொன்னபடி ஒருவாழ்க்கையை அமைத்துக்கொண்டால் மட்டும் போதுமா? அப்படியானால் நமக்கு அனேகம் பக்தர்களைத் தினம் காணலாம். ஆனால் ஞானியாய் ஒருவரைக்கூடக் காண்பது அரிது.

ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் ஓரளவிற்குப் பக்திக்கு அவசியமாயிருக்கலாம். ஆனால் நாம் காண்பதென்ன? கோயில்களுக்குச்செல்லுகிறார்கள் - காணிக்கைகளைச்செலுத்துகிறார்கள் - அர்ச்சனை முதலியவைகளைச் செய்கிறார்கள் - கிடைக்குமானால் பக்திக்கு அடையாளமாகக் காத்திருந்து பிரசாதங்களையும் வாங்கிச்செல்லுகிறார்கள். மகாநாடுகளுக்குப் பொருட்காட்சிகளுக்குத் திரைப்படங்களுக்கு என்பதுபோல் சில குறிப்பிட்ட நாட்களில் கோயில்களுக்கு மக்கள் ஏராளமாக வந்து சேர்கிறார்கள். அவர்களில் அனேகமாக மற்றவர் கண்களைக் கவரும் படியாகவே ஆடை ஆபரணங்களை அணிந்துவருகிறார்கள்.

வரும்போதே மற்றவர்களைப்பற்றி பேசிக்கொண்டே வருகிறார்கள் • வந்து சேர்ந்தபின்னரும் கோவிலுக்கு ஒருவிதமான தொடர்புமில்லாத பேச்சுகளிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள், சிலர் கோயில் பொறுப்பாளிகளைப்பற்றிக் குறைகூறியும், அங்குள்ள பழக்கவழக்கங்கள் தனது அந்தஸ்துக்கு ஏற்றதல்ல என்று நினைத்தும் அநாகரிகம் என்று பரிந்தும் தரிசனத்தை முடித்து விட்டுச் செல்கிறார்கள். இதற்கிடையில் சில நிமிஷங்களில் பிரார்த்தனையும் முடிந்துவிடுகிறது. தனது யஜமானனையோ மேலதிகாரியையோ காண்பதற்கு முன்னாலேயே கீழேவிழும் அங்கவஸ்திரம், தோளிலேயே அலங்காரமாய்க் கிடக்கும். தாராளமாய்ப் பத்துபைசா கொடுப்பதினால் அர்ச்சகர்களிடத்துத் தற்காலிகமாக ஒரு அதிகார தோரணை • ஒரு போலீஸ் சுப்பாயியையோ ஒரு பஞ்சாயத்து பிரசிடெண்டையோ கண்டால் கூட வளையும் முதுகும் குனியும் கழுத்தும் எம்பெருமான் முன் சென்றால் நிமிர்ந்தவாறே நிற்கும்.

கோயில்களுக்கு எதற்காகச்செல்கிறோம்? என்னசெய்கிறோம் எப்படிச்செய்தால் நம்விருப்பம் கைகூடும் என்று நினைப்பவர்கள் ஒருசிலரே. பொதுவாகவே

"आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ"

"ஆர்தோ ஜிஜ்ஞாஸ: அர்தார்தீ
ஞானீ ச பரதர்ஷப"

என்று பகவான் கீதையில் சொல்லுவதுபோல் நோய்வாய்ப்பட்டு வருந்துபவனும் உண்மையை உணர ஆவலுடையவனும் பொருள்சேர்ப்பதில் மிகுந்த அக்கரையுடையவனும்; ஞானியும் கடவுளைத்தேடுகிறார்கள். இவற்றுள் உண்மை (பரமாத்மதத்வம்) அறிய ஆவலுடன் இருப்பவர்கள் நாம்காணும் பக்தர்களில் எத்தனை சதவிகிதம் இருப்பார்கள்? ஞானிகள் எத்தனை சதவிகிதம்? இந்த இரண்டுவகைப் பக்தர்களுக்கும் எளிதில் தவறு ஏற்படாது. ஏனென்றால் உண்மையை நாடிச் செல்பவனுக்கு வேறு ஆசையில்லை. கால அளவில்லை. அயர்வில்லை. ஞானிக்கோ பக்தராகவும் இருக்கலாம். எதிலும் வேற்றுமை கிடையாது! ஆசையற்றவர்களாயிருக்கின்றனர். மற்றவர்களுக்கு ஆசையில்லாமலிருக்கமுடியாது. அப்போதுதான் பக்தி ஸகாம பக்தி (ஆசை, வேண்டுகோளோடு கூடினது) என்றும் நிஷ்காம பக்தி (வேண்டுகோள்ஒன்றுமில்லாமல் கடவுளிடத்து அபாரப்பிரேமையால் மட்டும் உருவாகக் கூடியது) என்றும் இருவகைப்படுகிறது.

தாய்தந்தையரிடத்துக் குழந்தையைப்போலவும், மந்திரிகளிடத்து மக்களைப்போலவும் அவர்கள் கடவுளிடத்தில் தங்களுக்கு வேண்டியதைக் கேட்கிறார்கள். ஆனால் விவேகமில்லாத தாய் தந்தைகளைப்போலவோ, மனச்சாக்ஷி இல்லாத மந்திரியைப் போலவோ அல்லாமல் கடவுள் வேண்டினவர்களுக்கு எது தகுதியோ அதை வழங்குகிறார். வேண்டினவர்கள் என்றால் வேண்டாதவர்கள் (கடவுளுக்கு) வேறு இருப்பார்களோ என்று சந்தேகமேற்படலாம்; அப்படி யில்லை. எதை வேண்டுமானாலும் ஆசைப்படலாம். கடவுளிடத்தில் கேட்கலாம். அதற்காகக் கடவுளுக்குக் காணிக்கையுங்கூட செலுத்துகிறார்கள். கடவுளைப்பற்றி அவர்கள் என்ன நினைப்பார்களோ? பரிதாபம்! எம்பெருமானுக்கு ஒவ்வொருவனுடைய தகுதியையும் தெரிந்து கொள்ள முடியாதா என்ன?

கடவுள் பக்தனுக்காக எந்த வேலையும் செய்வார், எதுவும் கொடுப்பார் என்பதற்கு அனேக கதைகள் இருக்கின்றன. ஆனால் அந்த பக்தர்கள் எப்படியிருப்பார்கள்; அவர்களுடைய பக்தி எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கீதையில் காண்கிறோம்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

அனன்யா: சிந்தயந்தோ மாம்
யே ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்தியாபியுக்தானும்
யோகக்ஷேமம் வஹாம்யஹம்.

"அன்னிய ரல்லாராய் என்னையே நினைத்து யாண்டும் என்னையே உபாசிக்கும் நித்திய யோகிகளுடைய யோக க்ஷேமத்தை நான் வழங்குகிறேன்" என்று பொருள்.

உலகத்தில் கடவுளின்றி ஓர் அணுவும் அசையாது என்று உணர்ந்து நம் குறைகளை நீக்கி நமக்கு வேண்டியதை அவரே செய்து கொள்வார் என்று உறுதி கொண்டு அசையாத பக்தியுடன் இருப்பவர்களுடைய காரியங்களைக் கடவுள் கவனித்துக் கொள்வார்.

அதற்கு நாம் முதலில் என்ன செய்யவேண்டும். நாம் செய்யும்எல்லாவற்றையும் கடவுளுக்காக அர்ப்பணிக்கவேண்டும்.

कायेन वाचा मनसेन्द्रियैर्वा
बुद्ध्यात्मना वा प्रकृतेः स्वभावात् ।
करोमि यद्यत्सकलं परस्मै
नारायणायेति समर्पयामि ॥

காயேன வாசா மனஸேந்திரியைர்வா,
புத்த்யாத்மனுவா பிரகிருதே: ஸ்வபாவாத்
கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை
நாராயணுயேதி ஸமர்பயாமி

உடலாலோ, நாவாலோ, மனதாலோ, புலன்களாலோ, புத்தியினுலோ, ஆன்மாவினுலோ மனித இயற்கையால் யான் என்னென்ன செய்கிறேனே அதெல்லாமே உமது அருள் என்று பரம்பொருளாகிய உம்மிடமே அர்ப்பணிக்கிறேன் என்று பொருள்.

உங்கள் குலதெய்வம் யாரோ அவரிடம் உங்களேயே அர்ப்பணம் செய்யுங்கள். அப்படியானுல் எப்போதும் கடவுளேப் பற்றிய சிந்தனே வரும். கடவுள் நினேவு நிரந்தரமாகும்போது கெட்ட செயல்களும் தகாத சிந்தனேகளும் கூட நம்மை விட்டுத் தாகுகவே அகன்றுவிடும். கோயில்களில் இன்று காணும் தகாத காக்ஷிகள் அவசியமில்லாத பேச்சுக்கள், ஒழுங்கீனமான நடவடிக்கைகள் எல்லாம் மறைந்து தைவீக அருள் விளங்கும் ஜனங்களிடத்தில் உண்மையான பக்தி ஓங்கும், மக்கள் சமுதாயம் சீரும் சிறப்புமாக விளங்கும். நாடு முன்னேறும்.

சிவ சிவ

---

EXTRACT FROM THE VISITORS' BOOK
Dharmapuram Adhinam
Velur Sri Vaithiyanathaswami Devasthanam,

Which South Indian will not be proud of this great temple of Lord himself? The temple is so well maintained that it speaks volumes of the great interest taken by the worshipful Head of Dharmapuram Adhinam.

(Sd) G. Balasubramanian,
19—9—1969. C/o Reserve Bank of India,
Bombay.

# திருவண்டப்பகுதி ஒரு சிந்தனை

திரு. T. N. அருணாசலம் பி. ஏ., பி. எல்.,

உருவண்டப் பெருமறை என்று உலகமெலாம் புகழ்கின்ற திருவண்டப்பகுதி என்று அவ்வகவலின் தனிச் சிறப்பைக் கூறும் வள்ளலார், அதன் சீரியபொருளை வாதவூரரே அருள் ஆசானாக வந்து தனக்கு வழங்க வேண்டுமென வேண்டவும் செய்வார். அத்துணைச் சிறப்புடைய அத்தனியகவலை எத்துணை ஈடுபாட்டோடு நாம் பயின்று, சிந்தித்துத் தெளியவேண்டுமென்பது வள்ளலார் வாக்கினின்றும் நாம் பெறும் அறிவுரையாகும்.

2. செம்பொருட் கருவூலமாகிய திருவண்டப் பகுதியில், 33 34 வது அடிகளில், "நினைதொறும் நினைதொறும் ஆற்றேன் காண்க: அந்தோ, கெடுவேன்" என்ற சொற்றொடரைக் காண்கிறோம். இத் தொடருக்கு உரைகளில் காணப்படும் பொருள்; இறைவனை அல்லது அவன் அருள் திறத்தை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் அவன் பிரிவாற்றாது வருந்துவேன்: பிரிவு அதிகப்பட்டால், அல்லது அவனை மறந்தால் நான் கெட்டொழிவேன் என்பதாகும். ஓர் உரை, அறிவு சொரூபத்தில் நிலைத்தலே இன்பம் ஆம்; அதனைவிட்டு வெளிமுகப்படில் துன்பமே என்று சிறப்புப் பொருளும் கூறும். பிறிதோர் உரை, இறைவனின் திருமேனி அழகிலும், அவன் செய்த உபதேசமாகிய உபகாரத்திலும் அடிகள் ஈடுபட்ட காலத்து அவருக்குண்டான செயலற்ற தன்மையைத் தெரிவிப்பது என்று சிறப்புரைகாணும்.

3. ஆற்றாமை பெரும்பாலும் துன்பமிகுதியால் வருவது; ஒரோர்வேளை இன்பமிகுதியாலும் வருவதுண்டு என அறிவோம். இங்குச்சொல்லப்பட்ட ஆற்றாமை அடிகளது மன நினைவில் எழுந்த ஓர் எண்ணத்தாலும், மேலும் அவ்வெண்ணம் தொடர்ந்து எழுந்ததாலும் விளைந்தது என்பதை அடிகள் வாக்கிலிருந்தே அறிகின்றோம். அடிகள் குறிப்பிடும் எண்ணம் இன்பத்தைப் பற்றியதா? அல்லது துன்பத்தைப்பற்றியதா? இவ்வினாவையே வேறு விதமாக அமைக்கலாம். அடிகளது ஆற்றாமை இன்ப எண்ணத்தினால் ஏற்பட்டதொன்றா, அல்லது துன்பநினைவால் விளைந்ததா? அடிகள், 'ஆற்றேன்' என்ற சொல்லினைத்

தொடர்ந்து, உடனடியாக, 'அந்தோ கெடுவேன்' என்பதால் அவ்வெண்ணம் துன்பச்சார்புடையதாகத்தானே இருக்க வேண்டும். நிற்க, உரைகளிற் சொல்லப்படுவதுபோன்று, இடையருது நினைக்கவேண்டிய பொருளை 'மறந்தால் அல்லது மிகப்பிரிந்தால் நான் கெட்டொழிவேன்' என்பதை, 'அந்தோ கெடுவேன்' என்ற சொற்களால் அடிகள் குறிப்பிடுவதாகக் கொண்டால், அது வருவித்துப் பொருள் கோடலாகத்தானே கொள்ளவேண்டும். மேலும், வருவித்துப் பொருள்கோடலே இங்கு முறையென்று கொண்டாலும் மிகப்பிரிதல் அல்லது (சிறிதே) பிரிதல் என்று உரை காணுதற்கு மூலச் சொற்கள் இடம் தருவனவாக இல்லையே.

4. 'மறந்தால், அதாவது ஒருவேளை இறைவனை மறக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டால்' என்பது மணிவாசகர் அகராதியில் நாம் காணுததொன்று. திருச்சதகத்தில் 51 ஆவது பாடலில் வரும் 'நினைக்கமாட்டேன்' என்ற ஒரு சொல்லினுக்கும்கூட நன்றியுணர்வோடு நினைக்கேனே என்றல்லவோ செம்பொருள் கண்டுள்ளார்கள். 'நெகும் அன்பு இல்லை நினைக்காண; நின் நினைந்து உருகும் தன்மை என் புன்மைகளால் காணுமதொழிந்தேன்; நீ அளித்த அருளினை என் மருளினுல் மறந்தேன்' என்பாரேயல்லாது, அவனையே மறந்ததாக அடிகள் திருவாசகத்தில் யாண்டும் சொன்னரில்லை. இறைவன்தான் இமைப்பொழுதும் அவர் நெஞ்சினின்றும் நீங்காதானுயிற்றே. அவர் சிந்தையில் நிற்பவனுயிற்றே. அவர் உள்ளத்தே படமாகத் தன் இணைப்போதவை அளித்து அங்கு இடமாகக்கொண்டிருந்தவனுயிற்றே. ஆகவே, 'கெட்டேன் மறப்பேனே கேடுபடாத் திருவடியை' என்றல்லவோ மணிவாசகர் சொல்லுவார். மறந்தேயும் அவன் கழல் நான் மறவா வண்ணம் அவனே தனக்குத் திறம் நல்கினன் என்கிருர் என்ருல், அவனை மறக்க நேரிடுமோ என்ற அச்சம் மணிவாசகர் மனத்தில் ஒருக்காலும் நிகழ்ந்திராது என்பது தெளிவு.

5. 'ஆற்றேன் காண்க; அந்தோ கெடுவேன்' என்ற சொற்களுக்கு உரைகளில் காணும் சிறப்புரைகளும் வலிந்து பொருள் காணும் வகையினதாகவே அடியேனுக்குத் தோன்றுவன. இன்னோரன்ன ஐயங்கள் எழுந்தமையால் என் உள்ளம் மேற்படி உரைவிளக்கங்களை ஏற்கத்தயங்கியது; திருவாசகத்தை மேலும் பயின்று, பொருந்தும் பொருள் காண விழைந்தது.

6. உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும்படாது கண்முதற் புலனுல் காட்சியும் இல்லாத இறைவன் கருணையாலே, அன்பர் களுக்கு எளிவந்து காட்சிகள் தருகின்ருன் என்பார் அடிகள். அக்காட்சிகளில் பல இனியன; பல, முதற்கண் காணும்போது, அன்பர்களுக்கு வாட்டம் தரும் தன்மையன. அவன் பெருமைக்கு இவை பொருந்தாவே என (அவன் அருள் திறத்தை முழுதும் அறிந்து உணராத நிலையிலே) அவர்களால் எண்ணப்படுவன. ஏனத் தொல் எயிறும், கானப்புலியுரியும், நீறும் அணிந்தும், பொங்கரவம் பூண்டும், நரம்போடெலும்பணிந்தும், கங்காளம் தோள்மேலே காதலித்தும், ஊன் ஆர் உடை தலையை உண்பலி தேர் கலனுகக் கொண்டும், பலிதேர் அம்பலத்தே கூத்தாடியும், தன்கோயில் சுடுகாடெனக்கொண்டும் அடியவர்களுக்குக் காட்சிகள் தருகிருன் இறைவன். அளவிலாச் சீருடையானை இக்கோலங்களில் காணுவதென்ருல் மிகு காதல் அடியார்களது மனம் வெதும்புறுவது இயல்புதானே.

7. முழுவதும் கண்டவனைப் படைத்தான் முடிசாய்த்து முன்னுள் செழுமலர்கொண்டு எங்கும் தேட அப்பாலனுகிய சிவபெருமான் இப்பால் கழுதொடு காட்டிடை நாடகமாடிக் கதியிலியாய் உழுவையின் தோலுடுத்து உன்மத்தம் மேற கொண்டு உழிதருகின்ருனே என அடியவர் அங்கலாய்ப்பர். மதிமயங்கியல்லவோ அவன் ஊனர் உடை தலையில் உண்பலி தேர்கின்ருன் என மனம் உளைவர். முத்தி முதலாகிய அவன் அத்தி உரித்து அது போர்த்தலோடல்லாது பித்த உலகிற் பிள்ளையுமாகின்ருனே எனக் கவல்வர்.

8. தன் எழிலுருவம் கண்டு புந்தி கொளப்பட்ட பூங்கொடியார் அச்சம் தரத்தக்க காட்சிகளைக் கண்டால் மனம் வெதும்புவரே என இறைவன் எண்ணினன் இல்லைபோலும் பாய்பரி மேற்கொண்டு ஒரு மங்கையின் உள்ளம் கவர்ந்தான் அவன். கண் அஞ்சனத்தனுக, நீண்ட கரத்தனுக, நெறிதருகுஞ்சியனுக, நிரம்ப அழகியனுக, நித்த மணளனுக அவளுக்குக் காட்சிதந்த அவனே ஆடரவப்பூண், உடைத்தோல், பொடிப் பூசிற்ருேர் வேடத்தோடும், கையில் தாளம் கொண்டு ஐயம் புகும் கோலத்தோடும் தோன்றுகின்ருன். இவ்வேடம் இருந்தவா கண்டு கண்டு மங்கையின் உள்ளம் வாடுகின்றது; நைகின்றது. அவள் இதைத் தன் அன்னையிடம் கூறி விளக்கம் கோருகின்ருள். அன்னை அவட்கு என்ன பதில் இறுத்தாளோ தெரியாது.

9. மங்கை இதுபற்றித் தன் தோழியையும் கேட்டாள். தோழி இறையனுபவத்தில் முதிர்ச்சி உள்ளவள்போலும். அவள் சொல்லுவாள்: ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானுன் ஆனதாலே அவன் பொங்கரவம் பூணுவதில் வியப்பொன்றும் இல்லையே. காலாந்தரத்து இருவர் தங்காலம் செய்ததனலன்றே அவன் நரம்போடெலும்பணிந்து கங்காளம் தோள்மேலே காதலித்தது. அவன் கானூர் புலித்தோல் உடுத்தால் என்ன? அம்பலத்தே கூத்தாடி ஐயம் கொண்டால்தான் என்ன? அவன் கோயில் சுடுகாடாக இருந்தால்தான் என்ன? அவன் காயில் உலகனைத்தும் கற்பொடியாயிடுமே; நான்மறைகள்தாம் அவனை அறிய இயலாது எம்பெருமான், ஈசா என்று ஏத்தினவே; அயனும் திருமாலும் வானுடர் கோவும் அவனுக்கு வழியடியார் ஆயிற்றே: எப்பெருமான் ஏதுடுத்து ஏதமுது செய்திடினும் தன் பெருமை தான் அறியாத் தன்மையனன்றே என்றெல்லாம் தோழி மங்கைக்கு விளக்கினுளென்க.

10. திகைப்புற்ற மங்கை தோழியின் விளக்கம் கேட்டுச் சிந்தித்தாள்; தேறினுள்; மனவாட்டம் தவிர்ந்தாள்; பேர்த்தும் மலர்ந்தாள். பிறகு இறைவன் பூணும் பொங்கரவம் கண்டு அவள் மனம் வெதும்பினுளில்லை. அவன் கட்டிய மாசுணக் கச்சையையும், கங்கணத்தையும், கவித்த கைமேல் இட்டு நின்றுடும் அரவத்தையும் பாடினுள். நீற்றெடு தோற்ற வல்லோன், தன் நீற்றுக்கோடியை நிமிர்ந்து காட்டும் திறன் உணர்ந்தாள். சிக்கெனச் சிவன் திரள் தோள்மேல் நீறு நின்றது கண்டனையாயினும் நெக்கிலை இக்காயம் எனத் தன் நெஞ்சுக்கு அறிவுறுத்தினுள். முன்னுள் தான் கண்டு உளம் வாடிய இறைவனது காட்சிகளின் திறத்தை, வகையை, இயல்பை, பரிசை, கிடப்பைத் தன்தோழி உணர்த்தியவாறே உணர்ந்தாள்; உணர்ந்து, அவன் மெய்ம்மையும் பொய்ம்மையுமாயும், சோதியும் இருளுமாயும்; துன்பமும் இன்பமுமாயும் ஆயினன் எனத் தெளிந்தாள். தெளிந்து அவன் நலம் பாடினுளென்க.

11. திருவண்டப் பகுதியில் மணிவாசகர் சிவபெருமானது வியாபகப் பெருமையையும், அளவிலாற்றலையும், அண்டகோடிகளெலாம் அவன் தன் அருள் வெளிக்குளே அதனதன் இயல்போடு தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைப்பதையும், முதல் முப்பது அடிகளில் விளக்குகின்றுர். இத்தகைய பெருமையும் பேராற்றலும் உடைய இறைவன் (திருமால் செழுமலர் கொண்டு அவனை எங்கும் தேடும் காலத்து கழுதொடு காட்டிடை நாடகம் ஆடினதேபோன்று) அவன் பெருமைக்கு ஒவ்வாதன போன்ற தோற்றங்களையும் கொள்கின்றுன் என

நமக்கு விளக்கும் முகத்தால், அவன் ஏனத் தொல் எயிறும், கானப்புலியுரியும், நீற்றையும் அணிந்து காட்சி தருகின்றான் என்பார். இக்காட்சி, அவன் அளவிலாச்சீருக்கு இழுக்குத்தருவது போலும் எனக் கருதுவார்போல (மங்கை இது போன்ற காட்சி கண்டு மனம் வாடித் தன் அன்னையிடம் கூறியதுபோல) தான் அக்காட்சியைத் திரும்பத்திரும்ப நினைவிற்கொண்டதால் விளைந்த ஆற்றாமையை உணர்த்தினரென்க. பின்னர், (மங்கை திகைத்துத் தேறிப் பேர்த்தும் மலர்ந்ததுபோல) அன்பர்களைப் பயில்விக்கும் பரம்பரன் வேறு வேறு உருவும், வேறு வேறு இயற்கையும் கொண்டு காட்சி தருதல் இயல்புதானே எனத் தெளிந்து, அக்காட்சிகண்டு தான் ஆற்றாமைகொண்டது என்ன பேதைமை என்பார்போல "அந்தோ, கெடுவேன்" என்றார் என்க.

12 மங்கையின் மயங்கிய உள்ளத்துக்கு விரைவில் ஒரு திருப்பம் காண விழைந்த தோழி 'ஆனாலும் கேளாய்' என அவளை விளித்து சிவனது சீர்களைத் தொடர்ந்து விளம்புவாள். அதுபோல, தான் ஆற்றாமை கொண்டமைக்கு ஓர் ஆறுதல் காண்பார்போல, அடிகளும், உடனேயே, அவனது நுட்ப வியாபகங்களை விளக்க முற்படுவதைக் காண்கின்றோம். முடிவாக, மங்கையினதும் தோழியினதுமான உள்ளங்களினூடே நின்று பேசியது மணிவாசகம்தாமே என மனத்திற்கொண்டால், அது இவண் விளக்க முற்பட்ட பொருளை மேலும் தெளிவுறக் காண்பதற்கு ஏதுவாம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I am very much impressed with the maintenance of the temple. The recent renovation of the temple has made very beautiful and devotees feel the sanctity of it very much. The Thambiran who maintains this temple has to be congratulated for the atmosphere he is maintaining in this temple. The Thevaram recitals by Othuvars inspires owe and reverence in the minds of visitors.

(Sd) P. R. Gokulakrishnan,

19—7—69 Judge, High Court of Tamil Nadu.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான், முதுபெரும்புலவர்.

**திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.**

( மலர் 28, இதழ் 10, பக்கம் 552இன் தொடர்ச்சி )

## பயனியல்

மாணாக்கன் : 'மக்கள் அடையும் பயன்களுள் வீடுபேறே முடிந்த பயன் என்றும், 'அவ்வீடுபேற்றிற்குச் சாதனம் ஞானமே' என்றும், 'ஞானமாகிய சாதனத்திற்குச் சாதனம் சரியை முதலிய தவங்களே' என்றும் தெரிவித்தீர்கள். இனி அப்பயனாகிய வீட்டுநிலை பற்றி இனிது விளக்கியருளல் வேண்டும்.

ஆசிரியர் : வேள்வி முதலிய பசுபுண்ணியங்களின் பயனையே, 'இன்னதற்கு இது' என அப்புண்ணியங்களை விதிக்கின்ற வேத நூல்கள் கூறும். ஆயின், இறப்பில் தவமாகிய, 'சரியை, கிரியை, யோகம்' என்னும் சிவபுண்ணியங்களின் பயனையும், அவற்றால் உளதாம் ஞானங்களின் பயனையும் சைவ நூல்களே கூறும்.

வைதிக நூல்கள் தாம் கூறும் கன்மங்களையே பயன் கருதாது செய்யின், அவை வீடு பயக்கும் எனக் கூறும். 'பயன் கருதாதவழி யாதொரு செயலும் நிகழாது' என்பதையும், அதனால், பயன் கருதாது செய்வது என்பதற்குப் பொருள், உலகப் பயன் கருதாது செய்தல் என்பதே' என்பதையும் முன்பே கூறினோம். ஆகவே, 'பயன் கருதாது செய்யும் கன்மங்கள் வீடுபேற்றைத் தரும்' என அந்நூல்கள் கூறுதல், அவை வீடுபேறு எனக்கருதும் பயன்களைத் தருதலையேயாம்.

மாணாக்கன் : அங்ஙனமாயின், 'வீடுபேறு' அல்லது 'முத்தி' என்பதனை எல்லா நூல்களும் ஒரு படித்தாகக் கூறுது, பல் வேறு வகைப்படக் கூறுகின்றனவோ ?

ஆசிரியர்: ஆம்! பல்வகைப் பொருளிலும் வேறுபட்ட கொள்கைகளை உடைய மதங்கள், முத்தியில் மட்டும் எங்ஙனம் ஒன்றுபட்ட கொள்கையை உடையனவாய் இருக்கும்? இரா. அதனால், ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு நிலையை முத்தி எனக் கூறும்.

## முத்தி பேதங்கள்

மாணாக்கன்: அவ்வாறாயின் அவை கூறும் முத்திநிலைகள் யாவை?

ஆசிரியர்: ஒவ்வொரு மதமும் பெறுதற்கரிய முடிந்த பேறாக எதனை உணர்கின்றதோ அதனையே முத்தி என்றும், அதனை உள்ளவாறு உணர்தலே ஞானம் என்றும், 'அந்த ஞானத்தை அடைவிக்கும் செயல்களே தவம்' என்றும் கூறும்.

### உலகாயத முத்தி:

அவ்வகையில் புறப்புறச் சமயங்களில் முன்னிற்கின்ற உலகாயத மதம், காணப்பட்ட மண்ணுலகத்திற்குமேல் வேறொன்றையும், உணராமையால், இதன்கண் உள்ள சிறந்த இன்பத்தையே பெறுதற்கரிய முடிந்த பேறாகக் கருதும். அச் சிறந்த இன்பமாவது, "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் - ஒண்டொடி கண்ணே உள" எனக் கூறியவாறு, ஒருகாலத்தே ஒருபொருளாலே ஐம்புலனையும் ஆரத்துய்க்கும் காமஇன்பமே. அதனால் அம்மதம், 'அரிவையர் இன்பமே முத்தி' என்றும், 'அதன் சிறப்பையும், அதனை நுகருமாற்றையும் அறியும் அறிவே ஞானம்' என்றும், 'அந்த ஞானத்தைத் தரும் இன்ப நூல்களைக் கற்றலும், கேட்டலும், அவற்றை உடையாரோடு இணங்குதலும், அவ் வின்பத்துக்கு ஏதுவாகிய பொருளை அரசன் ஆணைக்கு அடங்கிநின்று தேடவும், காக்கவும் முயலுதலும், பிறவுமே தவம்' என்றும், 'இவ்வாறன்றிக் கடவுள் என்றும், புண்ணிய பாவம் என்றும், சுவர்க்க நரகங்கள் என்றும், மோட்சம் என்றும் கூறும் கற்பனைகள் அனைத்தையும் கழன்றொழிதலே ஞானச் செய்திகள்' என்றும் கூறும். அதனால், அம்மதத்தில் நின்றோர் பெறும் பயன் அரிவையர் இன்பமே.

இவர்கள் அரசன் ஆணைக்கு அடங்கி நிற்றல் காரணமாக நல்லவற்றைச் செய்வார்களாயின், அதன் பயனாக மீண்டும் இந் நிலவுலகத்தில் மக்களாய்ப் பிறந்து நல்வாழ்க்கை வாழ்வர். அன்பு, அருள் காரணமாக நல்லவற்றைச் செய்வார்களாயின்,

அப்புண்ணியம் இவர்களை மறு பிறப்பில் பௌத்த சமண சமயிகளாகச் செய்து, புண்ணிய பாவங்களில் நம்பிக்கை உடையவராகச் செய்யும், சுவர்க்கத்தை உணராமையால், இவர்கள் அதனை அடைதல் இல்லை. அரசன் ஆணையை இவர்கள் அவன் அறியக்கடப்பின், அவனால் தண்டிக்கப்பெற்று, எஞ்சிய பாவத்தால் மறுபிறப்பில் பல துன்பங்களை அடைவர். அரசன் அறியாதவாறு அவன் ஆணையைக் கடந்து பாவம் செய்வராயின், நிலவுலகத்திற்குக் கீழ் உள்ள இரௌரவம், கும்பிபாகம் முதலிய நரகங்களை அடைவர்.

மாணுக்கன் : உலகாயத மதத்தில் நின்றோர் பெறும் முத்தி உண்மை முத்தியன்றாகையால், அம்மதத்தின் பயன் அதற்கு மேற்பட்ட பௌத்த சமண சமயங்களை அடைதல்தான்போலும்!

ஆசிரியர் : ஆம்! அதுவே அம்மதத்தாற் பெறும் உண்மைப்பயன்.

மாணுக்கன் : அவ்வாறாயின், பௌத்த சமண மதங்களில் நின்றோர் பெறும் பயன்கள் யாவை ?

## பௌத்த முத்தி :

ஆசிரியர் : பௌத்த சமண மதங்களின் சிறந்த கொள்கை, பிற உயிர்கட்குச் சிறிதும் துன்பம் செய்யாது, அவற்றிற்கு நலம் செய்தல் வேண்டும் என்பதே. ஆயினும், தத்துவக் கொள்கையைப் பௌத்தமதம் சிறிது வலியுறுத்துகின்றது. சமண மதம் அதனை வலியுறுத்த வில்லை. பௌத்த மதம், 'எல்லாப் பொருளும் சூனியமே, ஆதலின், பொய்யாக அறிவில் பதிகின்ற பிறபொருள் வடிவங்களுள் ஒன்றேனும் அறிவில் பதியாதவாறு அவற்றைப் பற்றறுது விடுதலே 'முத்தி' என்று கூறும். அம்மதம் பொருள்களை ஐந்து கந்தங்களாக வகுக்கின்றது. அவை, 'உருவக்கந்தம், வேதனைக்கந்தம், பாவனைக் கந்தம், குறிப்புக் கந்தம், ஞானக் கந்தம்' என்பன. 'கந்தம்' என்பதற்கு, 'தொகுதி' என்பது பொருள். 'ஐந்து தொகுதியும் அறவே எல்லாப் பற்றும் அறும். இப்பற்றறுதியே வீடு' என்று கூறுவதால், பௌத்தமதம் கூறும் முத்தி' பஞ்சகந்தம் கெடும் முத்தி' எனப்படுகின்றது. 'பஞ்சகந்தமாகிய தத்துவங்களின் இயல்பை நன்குணர்த்தலே ஞானம்' என்பதும், 'இதை உணர்த்த ஆதிபுத்தர் செய்த பிடகாகமத்தின் வழி நடத்தலே தவம்' என்பதும் அம்மதத்தின் கொள்கைகள். இம்மதம் புண்ணிய பாவங்களிலும் அவற்றின் பயன்களிலும்

நம்பிக்கை ஊட்டுவதால் இதன்கண் நிற்போர் புண்ணியத்தால் பிரகிருதி தத்துவங்காறும் உள்ள புவனங்களை அடைவர்; பாவத்தால் பிருதிவியண்டங்களில் உள்ள பலவகை நரக லோகங்களை அடைவர். ஞானத்தால் புருட தத்துவத்தில் பிரகிருதிக்கு அணிமையில் உள்ள புவனங்களை அடைவர். புருட தத்துவம் போகியாகச் செய்யாது, போத்திருத்துவத்தை மாத்திரம் தருதலின் பிரகிருதிகாறும் உள்ள தத்துவங்களின் நீங்கும் பௌத்தர்கள், புருடதத்துவ புவனத்தையே அடைவர் என்பது உணர்க.

மாணுக்கன்: பௌத்த மதத்தவர் அடையும் நிலை இது வாயின், சமண மதத்தவர் அடையும் நிலை யாது?

ஆசிரியர்: சமண மதம், பொருள்களைச் சூனியம் என்று கூறுது உளவென்பதனை ஒருபுடை உடன் பட்டு, 'காணப்படுகின்ற இவ்வுலகத்திற்கும் நூல்களிற் கேட்கப்படுகின்ற அவ்வுலகத்திற்கும் அப்பால் விட்டுலகம் என்பதொன்று எல்லையின்றிப் பரந்து கிடப்பது; அதனை அடைதலே முத்தி' என்றும், 'அம்முத்தி யுலகத்தை அடைய விரும்பும் உணர்வே ஞானம்' என்றும் 'அந்த ஞானம் உண்டாவதற்குத் தடையாயுள்ள மோகம் முதலியன நீங்குதற்பொருட்டு மனத்தைப் பொறிவழிச் செல்லாது தடுத்துச் சிற்றுயிர்களுக்கும் துன்பம் உண்டாகாதவாறு இயங்கி, நியம உணவு கொண்டு, சுடுபாறையில் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலியவற்றைச் செய்தலே தவம்' என்றும் கூறும். பொறிவழிச் செல்லாது இம்மை அம்மை உலகங்களின் நீங்குதலோடு அமைந்து நில்லாது, மேலும் ஓர் உலகத்தை நோக்குதலால், இம்மதத்தில் நிற்போர், புருட தத்துவத்தில் பௌத்தர் அடையும் புவனங்கட்கு மேலுள்ள புவனங்களை அடைவர். இவர்கள் கூறும் முத்தியுலகமும் ஒரு வகைச் சுவர்க்கமேயாதலின், இம்முத்தி, 'சுவர்க்க முத்தி' என்றே சொல்லப்படும். இவர் செய்யும் புண்ணிய பாவங்கட்கும் பயன் பௌத்தர்கட்குச் சொன்னவாறேயாம்.

(தொடரும்)

# சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

# பாராட்டு விழா

சென்னைத் தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின்படி, தவத்திரு. குன்றக்குடி அடிகளாரைத் தமிழக அரசு மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருப்பதைமுன்னிட்டு அடிகளார் அவர்கட்கும், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கட்கும், தமிழக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கோ. வீராசாமி அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில், 26 – 6 – 69 அன்று மிகவும் சிறப்பானதொரு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் முற்பகுதியில், வேளூர்த் தேவஸ்தான இறைபணி மன்ற மண்டபத்துக்கான கால்கோள் விழாவை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா B.A., அவர்கள் நடத்திவைத்தார்கள்.

திருமதி. சௌந்தரா கைலாசம், திரு. கீ. இராமலிங்கனார் சிலம்புச்செல்வர் திரு ம. பொ. சிவஞானம் ஆகியோரும் விழாவில் பங்கேற்றுப் பேசினர். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். அனைவரையும் வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு, முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது :

"தருமை ஆதீனத்தார், உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் நடத்துகின்ற இந்தப் பாராட்டு விழாவில் கலந்து கொள்கிற வாய்ப்பினை எனக்கு அளித்தவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலருக்குக் கருணாநிதியா! தருமபுர ஆதீனத்திலா! கலந்து கொள்வதா! என்றுகூட ஆச்சரியம் ஏற்படலாம். அத்தகைய ஐயமேற்படலாம். நான் இங்குவரத் துணிந்தது ஆச்சரியமல்ல. ஆனால் என்னை இங்கு அழைக்க இவர்களுக்குத் துணிவுவந்ததே, அதுதான் ஆச்சரியம்!

ஒரு மடாதிபதியை இன்னொரு மடாதிபதி பாராட்டுவதென்பது புரட்சிகரமானது என்று ம. பொ. சி. கூறினார். ஒரு வேளை இந்த நியமனத்தை வேறு சில மடாதிபதிகள் எதிர்க்கக்கூடும் என்று எண்ணிக் கொண்டிருந்து அப்படி ஏதும் நிகழாதது கண்டு, அதையே புரட்சிகரமானது என்று அவர் கூறியிருக்கக் கூடும்.

தமிழ் நாட்டில் ஒரு தமிழன் புகழும் பெருமையும் அடைவதை எண்ணி, மற்றொரு தமிழன் பாராட்டுகின்ற அந்தப் பண்பை மீண்டும் பெறுகிற யுகத்தை நாம் பெற்று வருகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகவே இந்த விழா நடக்கிறது.

தமிழ் நாட்டு மடாதிபதிகள் ஒற்றுமையாக இருந்து காரியங்களைச் செய்தார்கள் என்பதே இந்த ஐந்தாறு ஆண்டுகளாகத்தான். குன்றக்குடி அடிகளாரை மற்ற மடாதிபதிகள் ஏற்றே இரண்டு ஆண்டுகள் தான் ஆகின்றன.

மடாதிபதிகளுக்குள் இழையாக இருந்து அத்தனை பேரையும் ஒரு மாலையெனச் சேர்த்த பெருமை குன்றக்குடி அடிகளாரைச் சாரும்.

குன்றக்குடி அடிகளார் மேலவை உறுப்பினராக ஆனதற்கு-ஆக்கப்பட்டதற்குப் பாராட்டுக்கள் என்று இங்குப்பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அடிகளாரைப் பாராட்டுவதில் ஒன்றுமில்லை. அடிகளார் ஏதோ இந்தப் பதவியைப்பெறப் பெரிய முயற்சியிலீடுபட்டார்—வெற்றி பெற்றார் என்று சொல்லி, அவரைப் பாராட்ட இயலாது. சாதாரணமாக எந்த இடத்திலும் பாராட்டுக்களை உதறி விடுகிற நான், இப்போது தெரிவிக்கப்பட்ட பாராட்டுக்களை முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறேன்.

மேலவை உறுப்பினராக ஆகும்படி நான்தான் நீண்ட நேரம் தொலைபேசியில் அவருடன் பேசி, ஏற்றுக்கொள்ளும்படி சொன்னேன். யோசித்துக் கூறுங்கள் என்று சொன்னேன். அவர் ஏற்றுக்கொண்டபோது, நான்தான் அவருக்கு நன்றி சொன்னேன். ஆகவே பாராட்டுக்களுக்கு உரியவன் நான்தான்.

கலாச்சாரம், கலை, இலக்கியம், விஞ்ஞானம் சமூகப்பணி என்ற தலைப்புக்களில், கவர்னர் அவர்களால் நியமனங்கள் செய்யப் படுகின்றன என்றும், இவற்றோடு, சமயம் சேர்த்துக் கொள்ளப் பட வேண்டும் என்றும் திரு. ம. பொ. சி. கூறினர். சமயத்துக் கென்று பிரித்து வைத்து விட்டால், சமயத் தொண்டு மட்டும் செய்தால் போதும்; இலக்கியமெல்லாம் தேவையில்லை என்று சமயத்தோடு நின்றுவிடுவார்கள். இலக்கியத் தொண்டுக்கு இடமில்லாமற் போய்விடும். ஆகவே சமயம்என்பதை அந்தந்தச் சமயத்துக்கு வைத்துக்கொள்வோம். சமயம் என்று பிரித்து வைத்துக்கொள்வோம். சமயம் என்று பிரித்து வைத்து அந்தக் கோட்டுக்குள் அவர்களை வைத்துவிட வேண்டாம் என்று நான் நினைக்கிறேன்.

மடாதிபதிகளுக்கு மேலவை என்பது வேறு எங்கோ இருப்பது. மக்கள் தொண்டாற்ற ஒரு மேலவை இங்கு உள்ள தென்று அவர்களை இங்கு அழைத்து வந்தேன். மகேசன் தொண்டாற்றி அடைய எண்ணுகிற மேலவை வேறு! அடி களாரை மேலவை உறுப்பினராக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் திடீரென்று ஏற்பட்டது என்பது உண்மை, கருணாநிதி யாக இல்லாதிருந்தால் ஏதோ ஒரு சக்தி என்னுள் தோன்றி இப்படி ஆணையிட்டது என்று கூறியிருக்கலாம்.

கழக அரசைக் குறித்து மக்களிடத்தில் ஒரு தவருன கருத்துப் பரப்பப்பட்டுள்ளது. முன்னேற்றக் கழக அரசின் கீழ் ஆலயங்களுக்கு ஆளும் கட்சிக்காரர்களாலும், அவர்களுடைய ஆதரவைப் பெற்றவர்களாலும், கொடுமை நிகழ்வதாக இன்றள வும் நாகரிகமான நடுநிலை ஏடுகள் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிற பெரிய ஏடுகள், தலையங்கங்களை எழுதித் தீர்த்தன. நாங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னேம், நாங்கள் அளித்த விளக்கங்களும், கொள்கைகளும் ஏடுகளால் சரியாகப் பிரசுரிக்கப் படுவதில்லை. அந்த அளவுக்கு அவர் களுக்கு எரிச்சல். ஏனென்ருல் நாங்கள் சாமானியர்கள். ஆகவேதான் நாங்கள் தருகிற செய்திகளையும், கொள்கை விளக்கங்களையும் அவைகள் அலட்சியம் செய்து விடுகின்றன.

அடிகளாரைப் போன்றவர்கள் நேரடியாகப் பார்த்துச் சொல்லட்டும். அப்படிச் சொன்னல் நாட்டு மக்களுக்கு அது நன்கு தெரியும் என்ற சுயநலத்தோடுதான் அடிகளாரை மேல வைக்கு அழைத்து வந்தேன்.

அமைச்சர் திரு. சுப்பையா எடுத்துக் கூறிய கடவுளை நேசிக்கும் மனிதன்—கடவுளால் நேசிக்கப்படும் மனிதன்—ஆகிய இரண்டு வகைப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளார். நாங்கள் கடவுளால் விரும்பப்படுகிறவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றிருக்கிறோம். எங்களுக்குள்ள இதர பட்டியலெல்லாம் சிறைகளில் எங்களுக்கிருந்த பட்டியல்தான்.

என்னுடைய இளமைப் பருவத்தில் மதக்கருத்துக்களோடு வேறுபட்டு அவைகளுக்கெதிராகப் போராடியவன் நான். ஆனால் எல்லா மக்களுக்கும் பொறுப்பான ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் அனைவருக்குமாகத்தான் செங்கோல் பிடிக்கவேண்டும். எனது கருத்துக்களுக்காக மட்டுமென்று சொல்லித் தனிச் செங்கோல் பிடிக்க முடியாது. எங்களை எல்லாம் ஆளாக்கி விட்டு மறைந்த அண்ணனிடமிருந்து கற்றவை இவை.

தவத்திரு அடிகளார் அவர்களும், 'தாமரைச் செல்வர்' திரு. சுந்தரவடிவேலு அவர்களும், துறவியும் வேந்தரும் ஆக இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். "துறவிக்கு வேந்தனும் துரும்பு" என்பார்கள், இவர்கள் இருவருமாகச் சேர்ந்து இந்த ஆட்சியைப் பகைவர்களுக்கு இரும்பாகவும், நண்பர்களுக்குக் கரும்பாகவும் ஆக்கட்டும்! எனத் தமிழக முதல்வர் மாண்புமிகு. கலைஞர். மு. கருணாநிதி அவர்கள், தமது அரிய இனிய பாராட்டுரையினை வழங்கினார்கள். கூடியிருந்த மக்கள் அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் அவ்வப்போது கைதட்டிப் பாராட்டி இன்புற்று உவந்தனர்.

திருத்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் சார்பில், பாராட்டுப் பெற்றவர்களுக்கும், தலைமை நீதிபதி, முதலமைச்சர், அறநிலைய அமைச்சர் ஆகியோர்களுக்கும், வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்கள் சமயப்பிரசார நிலையத் தமிழ்ப் புலவர் வகுப்பு மாணவ மாணவியரின் சார்பிலும். தவத்திரு அடிகளார், துணைவேந்தர் முதலிய பெருமக்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. இறை வணக்கத்துடன் பாராட்டு விழா நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

( மலர் 28, இதழ் 6, பக்கம் 343 இன் தொடர்ச்சி )

துர்வாசர், பிங்களர், உக்ரஜ்யோதி, சுபோதர், ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், வித்யாகண்டர், ராமகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், சோமசம்பு, பிரும்ம சம்பு, திருலோசனசிவர், அகோரசிவர், ப்ராசாதசிவர், ராமநாதசிவர், ஈசானசிவர், வருணசிவர், எனப் பதினென் பேர்கள். இதில் சிலர் வேருகக் காணப்படுகிருர்கள். அவர்கள், சர்வாத்மசிவர், சர்வேச பண்டிதர், வியாபகசிவர் வியோமசிவர், உத்துங்கசிவர் என்று.

இவர்களால் செய்யப்பட்ட பத்ததிகள் யாவும் சிவாகமங்களின் விதிகளைக் கடைபிடித்து நித்திய நைமித்திக காம்ய பூஜாமுறைகளை ப்ரயோக முறையில் கூறியுள்ளது.

இந்த பத்ததிகளில் ஒவ்வொருவரும் தினம் தினம் செய்யவேண்டிய காரியங்களும் அதைச் செய்யவேண்டிய காலங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

ब्राह्मेमुहूर्त उद्धानं ध्यानावश्यक शौचकम ।
दन्तशुद्धास्नुवौ सान्ध्यं गायत्री जपएव च ॥
एतानीचोदयात्पूर्वं कुर्युस्त्रैवर्णीका जनाः ।
उदितेतु दिवानाथे स्त्रीशुद्रादि स्तथाऽचरेत् ॥

(விமலாகமம்)

பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருத்தல் தியானம் ஆவச்யமான கிரியை சௌசம், தந்தசுத்தி, ஸ்னனம், சந்தி, காயத்ரீஜபம் இவைகளைச் சூரிய உதயத்திற்கு முன்பு செய்யவேண்டும். சூத்ரன், ஸ்திரீகள் சூரியன் உதித்தவுடன் செய்யலாம், என்று விமலாகமம் கூறுகிறது.

ப்ராம்ம முகூர்த்தம் என்பது சூரிய உதயத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையாகும், இது சாதாரண விஷயம்.

பூஜக விஷயம் வேறு, அதாவது இரவை ஆறு பங்கு செய்து ஆருவது பங்கில் எழுந்திருக்கவேண்டும், என்பது - இதுதான் பஞ்ச பஞ்ச உஷக்காலம் என்பது.

இவ்வாறு எழுந்தவுடன் மங்களத்திரவியங்களைக் காண வேண்டும்.

लोकेऽस्मिन्मङ्गलान्यष्टौ ब्रह्मणोगौर्हुताशनः ।
हिरण्यं सर्पिरादित्यः आपो राजा तथाऽष्टमः ॥

அந்தணன், பசு, அக்னி, பவுன், நெய், சூரியன், ஜலம், அரசன், இந்த எட்டும் மங்களங்கள் எனப் பெயர். இதில் ஏதாவதொன்றை எழுந்தவுடன் காணவேண்டும். எழுந் திருந்தவுடன் தனது கையைப் பார்க்கவேண்டும். கையி னுடைய நுணியில் லக்ஷ்மியும், கையின் நடுவில் சரஸ்வதியும், கையின் அடியில் கோவிந்தனும் வசிக்கிருர்கள்; ஆதலால் கையைத் தரிசிக்கவேண்டும். எழுந்தவுடன் இறைவனைத் தியானித்து வாக்கிஞல் ஸ்தோத்திரங்களைப் படிக்கவேண்டும்.

कराग्रे वसते लक्ष्मीः करमध्ये सरस्वती ।
करमूलेतु गोविन्दः प्रभाते करदर्शनम् ॥

அல்லது

श्रोत्रियं सुभगं गां च अग्निमग्निचितं तथा ।
प्रातरुत्थाय यः पश्ये दापत्भिः सप्रमुच्यते ॥
रोचनां चन्दनं गन्धान् मृदंगं दर्पणं मणिम् ।
गुरु मग्निं रविं पश्येत् नमस्येत् प्रातरेव हि ॥

வேதாத்தியயனம் செய்த உயர்ந்த அந்தணன். பசு, அக்னி, அக்னிஹோத்ரம் செய்பவர், இவர்களைக் காலையில் எழுந்த வுடன் பார்த்தால் அவனுக்கு வரும் ஆபத்து நீங்கும். மற்றும், கோரோசனை, சந்தனம், வாசனைப் பொருள்கள், ம்ருதங்கம், கண்ணுடி, ஆசாரியன், அக்னி, சூரியன் இவர்களைக் காலையில் பார்த்து உடன் வணங்கவேண்டும்.

காலையில் துயில்விட்டு எழுந்தவுடன் இறைவனைத் துதித்துத் தான் செய்யவேண்டியதான சுபகாரியங்களை நினைத்துத் தீர்மானம் செய்துகொண்டு தீர்த்தபாத்திரம் தண்டத்துடன் வெளியிற்செல்லவேண்டும் என்று அஜிதாகமம் கூறுகிறது.

மண், பற்குச்சி, சாணம், புஷ்பம், எள், நெல்லிப்பொடி, தர்ப்பை, இவைகளுடன் சமுத்திரத்தை அடையும் நதிக்குப் போகவேண்டும். ஏன்எனில் சமுத்திரத்துடன் சேரும் நதி உயர்வு. அதில் செய்யப்படும் ஸ்னானம் மிகவும் உயர்வு.

கிராமத்திற்கு ஈசானபாகத்தில் சென்று மலஜல விஸர்ஜனம் செய்யக்கூடாது. கிராமத்திற்குச் சிறிது வெளியிற் சென்று மலஜல விஸர்ஜனம் செய்யவேண்டும். பகற்காலங்களில் வடக்குமுகமாகவும் இரவில் தெற்குமுகமாகவும் சந்தியா காலங்களில் பகலுக்குக் கூறியதுபோலும் மலஜல விஸர்ஜனம் செய்யவேண்டும்.

பூணூலைக்காதில் சுற்றிக்கொண்டும் வஸ்திரத்தினல் சிரோவகுண்டனம் செய்துகொண்டும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு பேசாமலும், ஆகாயம் திக்கு இவைகளைப் பாராமலும் மலஜல விஸர்ஜனம் செய்யவேண்டும் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது.

மனம் திருப்தி அடையுமளவு சௌசம் செய்யவேண்டும். சௌசம் செய்யப்பட்டு மீதியாயுள்ள ஜலம் மண் இவைகளை மறுபடி எதற்கும் உபயோகிக்கக் கூடாது. ஆசாரத்தினல் தான் ஞானமுண்டாகிறது. ஆசாரத்தினல் பொருள் உண்டாகிறது. ஆசாரத்தினல்தான் முக்தியுண்டாகிறது. ஆசாரத்தினல் சர்வம் உண்டாகிறது என்று காரணகமம் கூறுகிறது.

आचाराल्लभते ज्ञानं आचाराल्लभते धनम् ।
आचारान्मुक्ति माप्नोति आचारात्सर्वमाप्नुयात् ॥

— காரணகமம்.

வலது காலைக் கரையில் வைத்துக்கொண்டு இடதுகாலை ஜலத்தில் வைத்துக்கொண்டு, திக்குகளையும் ஆகாயத்தையும் பார்க்காமல் கையைப் பசுவின் காதுபோல் வைத்துக்கொண்டு தடவை ஒன்று உளுந்து முழுகும் அளவுள்ள ஜலத்தை மந்திரம் சொல்லி உட்கொள்ளவேண்டும். இவ்வாறு மூன்று தடவை உட்கொண்டு உதட்டைப் பெருவிரலால் துடைத்துக் கொண்டு முகத்தைக் கையினால் துடைத்துக்கொண்டு ஜலத்தினால் கால்களைப் புரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். இது ஒரு ஆசமனம் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது.

பல் தேய்க்கும்போதும் மலஜலம் கழிக்கும்போதும் சௌசம் செய்யும்போதும் ஸ்நானம், ஜபம், பூஜை உணவு, பிக்ஷை, இக்காலங்களிலும் மௌனமாக இருக்கவேண்டும்.

(கிரியாகாண்டக்கிரமாவளி)

பல் துலக்குவதற்குரிய குச்சி ஈரமுள்ளதாயும் நேரான தாயும் கணுவற்றதாயும் சுண்டுவிரல் பருமன் உள்ளதாயு மிருக்கவேண்டும். (சோமசம்புபத்ததி)

நவமி, பர்வம், ஷஷ்டி, பிரதமை இவைகளில் புபுக்ஷ குச்சியால் தந்த தாவனம் செய்யக்கூடாது. மாவிலை முதலிய பத்ரங்களால் செய்யலாம், (சோமசம்புபத்ததி)

ஆறு இருக்கும்போது குளம் கிணறுகளில் ஸ்நானம் செய்யக்கூடாது. ஆனால் சிவாலய சமீபமான குளம் சுத்தமாகவோ அசுத்தமாகவோ இருப்பினும் அது கங்கைக்கு ஒப்பாகும். அதில் ஸ்நானம் செய்வது விசேஷம்.

(காமிகாகமம்)

பஞ்சமுத்ரையால் கண், காது, மூக்கு இவைகளைப் பொத்திக்கொண்டு முழுகி அஸ்திரமந்திரத்தை நினைத்து ஸ்நானம் செய்துவிட்டு அஸ்திர சந்தியைச் செய்யவேண்டும்.

(சோமசம்பு)

நிசியில் ஸ்நானம் செய்யக்கூடாது. ஆனால் க்ரஹணத்தில் ஸ்நானம் செய்யலாம். விருத்ரன் என்ற அசுரனின் குருதி இரவில் ஆற்றில் போவதால் நிசியில் ஸ்நானம் செய்வது கூடாது.

(சுப்ரபேதம்)

# எதை எழுதுவது?

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.

உண்மை, பொறுமை உயர்நெறி காட்டிய
அண்ணல் காந்தி அடிகள் பிறந்த
நூற்றாண் டென்ற நுண்ணிய நினைவில்,
மாற்றார் தமக்கும் மாணெறி காட்டிய
செம்மலை எண்ணிச் செம்மாந் திருந்தேன்.
அம்மவோ! இந்திய அன்னை விலங்கை
வாய்மைப் புரட்சியால் வழுவிலா தறுத்த
தாய்மைக் கிழவன்; தன்னிறை வுற்ற
உலகினைக் காண ஓயா துழைத்த
திலகமாம் காந்தி திருநெறி போற்றி,
எதனை எழுதி ஈவதாம் என்றே
உதவிய சிந்தனை ஊசலில் ஆடி
இருந்தேன் உணர்வில் எழுந்த நெகிழ்ச்சியைப்
பொருந்தக் கூறுவன்; புலவீர், கேளீர்;

❋ ❋ ❋

"கவிதை யெழுதுக கவிதை யெழுதுக
செவிநுகர் கனிகளைச் சிறக்கத் தருக"
என்றென் இதயம் எழுச்சியைத் தூண்டும்;
அன்றியென் னறிவோ அதனை மறுக்கும்.
"கவிதை எதற்கோ கைவருந் திடநீ
புவியிற் றீட்டுவை? பொருளுண்டோ வதற்கு?
விழலுக் கிறைத்தநீர் வீண், கவி பாடல்;
சுழன்றிடும் உலகோ சுவைக்கும் கவிதையை?
மருமங்கள் பொதிந்த மாண்கதை தீட்டுக.
கருமமும் இன்றிக் கணக்கிலாக் கதைகள் (10)
பாலுணர்ச்சி யூட்டும் படிக்குநீ தீட்டுக;
மேலுணர்ச்சி யில்லா மேதினி மாந்தர்
உணர்ச்சியைப் புரட்டும் ஒருகதை வேண்டுவர்;
புணர்ச்சியிற் பொருந்தாப் பொய்மையே விழைவர்.

பொழுது போதலும், அதனுற் சிந்தை
பழுதே ஆதலும் பாரில் நினைத்திலர்
அதனுல் கவிதை அழகுற வரைவதை
நிதமுநீ நிறுத்துக" என்றது உலகியல்
பழகிய அறிவு; பாரில் என்பாடோ
உழந்திடும் பெரிய பாடாய்ப் போனது.
என்ன செய்யநான் எழுதவா கவிதை?
சொன்னது போலச் சுவைபல கூட்டிக்
காமக் களிக்கூத் தாடிடுங் கதையை
ஏமப் புணையென என்னின மாந்தர்
தமக்குத் தரவா? தக்கது யாதாம்?'—
சுமக்கும் நினைவொடு துவண்டேன் பலகணம்;
தரமா, பொருளா என்றபோ ராட்டம்
உரமாய் எழுந்தே உலவிற்று மனத்தே;
கால ஆற்றினில் கடுகி ஓடிடும்
மூலக் கதையா? முடிவிலா இன்ப
உணர்வினைத் தூண்டும் ஓவியப் பாட்டா?—
உணர்ந்திட வேண்டி உழன்றதென் மனமே;
இத்தகு மோதல் என்னுளே நிகழப்
புத்தகச் சோலை புகுந்திட வெண்ணி
நூலகம் புகுந்தேன்; நோக்கினேன் பலநூல்.

* * *

சாலவும் பழைய சான்றவர் சாற்றும்
உண்மையை ஒரும் உள்ளத் தோடே
திண்மையாம் வள்ளுவர் திருக்குறள் எடுத்தேன்:
உலகத்தோ டொட்ட ஒழுகலே நன்று;
பலகற்றும் பயனிலை பாரினில் இதனை
உணர்ந் திலராயின் உலகினில் என்றுன்
வள்ளுவன் ஒருபுறம்; வையகத் தோடே
ஒழுகுதல் என்றுல் உரைத்ததும் இதுவா?
பழுதுடை யோர்தம் பாதையிற் செல்வதா
வள்ளுவன் சொன்னது? வரைந்திடில் அப்படி
உள்ளம் நோகுமே; உயர்ந்தவ ரென்றுல்
அறனறிந்து மூத்த அறிவின ரன்றே?
திறனறிந்து தேரில் அதுவன்றே திட்பம்!
அறமும் அறிவும் அமைந்த சான்றோர்கள்
உறவே உலகில் யாண்டும் இருப்பர்.

அன்னோர் கூறும் ஆறே ஒழுகுக!
பின்னோர் பேயோர் பேச்சுக் கொள்ளேல்;
என்பதே தெளிவுரை; இதனைத் தெளிந்தே,
பின்னும் புரட்டினேன்; பேசினன் வள்ளுவன்;
"ஒழுக்கம் உயிரினும் உயர்வுடையதுவாய்
இழுக்க மின்றி என்றும் பேணுக!"
மக்கள் ஒழுக்கம் மாண்புடைப் பெரியோர்
தொக்கினி துரைக்கும் தூமொழி யாலே
என்றும் நிலைப்பதாம்; இன்ப நன்னாட்டில்
ஒழுக்கம் கெடுக்கும் பொழுது போக்கினைத்
தடுப்பது நன்றாம்; தாவிலா வாழ்வே
வேண்டத் தக்கதாம்; விழுப்பமில்லாத
கயமைச் சேற்றில் தள்ளிடும் கதைகள்
பயக்கும் தீமைகள் பகரவும் படுமோ?
கதைகளும் வேண்டும்; கருத்துடன் சிந்தனைப்
புதையலாய் வாழ்வைப் பொருக்கென உயர்த்தும்
திறம்படைத் தவையாய்த் தேவையாம் கதைகள்.
அறம் பிழியாத ஆசிரியன் மார்கள்
எளிமை, இனிமை இயன்ற போக்கினில்
தெளிவுறப் புதுமை திகழ்ந்திடத் தீட்டும்
புனைகதை வேண்டும்; புதுமை இலக்கியம்
வினைபடப் பெருகும் வித்தகம் வேண்டும்.
தமிழ்உரை நடையில் தகுமறு மலர்ச்சி
அமிழ்தென விரவுதல் அறிவுளோர் விழைவாம்.
என்றென் னுள்ளம் வள்ளுவம் வீசிய
தென்றலோ டிணைந்து திரிந்தது; பின்னர் —
சங்க இலக்கியப் பூங்காப் புகுந்தேன்.
தங்கம் நிகர்த்த தண்டமிழ்ப் பாக்களாம்
பூந்தேன் குவியலில் புறப்பட் டுலவினேன்;
மாந்த ரினத்தின் மகிழ்ச்சிக் கெனவே
இலக்கியம் எனினும் ஏற்ற பண்பாடு
துலக்குவ தொன்றே தூய குறிக்கோள்
ஆகக் கொண்ட அரும்புல வோர்கள்
ஈகைத் தமிழில் இலங்கிடக்கண்டேன்.
செல்வம் ஒன்றே வாழ்வின் உயிர்ப்பாய்
நல்லோர் நினையார்; முயற்சியே ஆடவர்
உயிராம் என்றே ஓதுவர் அறிவர்.

அயிர்ப்பிலை இதற்கென் றறிந்தபின் வெளியே
வந்தேன்; இதயம் வார்த்தை தொடுத்தது:
'சிந்தனை செய்,நீ! செந்தமிழ் நாட்டில்
நல்லன கூறி நல்லன நாடுதல்
எல்லா வகையினும் ஏற்றதாம் உனக்கே.
பணமொன்று கருதிப் பாழானவை தமைப்
புணர்க்கும் புன்னெறிப் போவையோ நீயும்!
வறுமை அடையினும், பெருமை தொலையினும்
சிறுமை சேரினும் சிறியன தம்மை
எண்ணிடேல்; என்றும் ஏற்றன எழுதுதி;
நண்ணிடேல் பொருளின் நலமே கண்டிட'
என்றதென் இதயம்; இருசெவி கொடுத்து
நன்றெனக் கேட்டேன்; நாடிய அறிவோ,
சிந்தனைப் பின்னலைச் சிக்கென அறுத்தது:
'வந்தனையா, என்வழிக்கு வா,வா?
நொந்திடு வாயோ? நோயுறு வாயோ?
சிந்திப் பாயோ? செயல்உயர் வாயோ?
பொருளுக்கே எழுதாப் புலவன்ஆ வாயோ?
பொருளை மதியா வாழ்வும்ஓர் வாழ்வோ?'
அதிர்த்ததென் அறிவும்; 'ஆம்ஆம் உன்னுரை
புதிரும் அன்றே; ஆயினும் வாழ்வில்
தேவைக்கு மேலே தினமுநான் விழையேன்.
சாவையே நோக்கினும் சான்றாண்மை வழுவேன்.
சத்திய சோதனை சாதித்த தேனும்
நித்தியம் தவறேன்; நீள்பரம் பொருளின்
தனிநெறி மாறேன்; தனிப்புவிப் போக்கே
இனியுமென் வாழ்வை அசைத்திடா' தென்றேன்.
அடங்கிற்று முன்னே ஆர்த்தவென் அறிவும்;
முடங்கிய நிலையினின் உணர்வோ கிளர்ந்தது.
தரமா? பொருளா? தக்கது எதுவாம் —
உரமான வினவின் உள்ளுறை புரிந்தது.
விழுமிய நோக்குடன் விரைந்திடும் கவிதையோ
பழுதிலாக் கதையோ எதுவே ஆயினும்
மாந்தர் தமக்குக் கசக்குமே எனினும்
சாந்துணைப் போதும் எழுதுதல் சால்பாம்.
நோய்க்கு மருந்தினை நுகர்ந்திடத் தருக!
வாய்க்குக் கசத்தலை மனத்திற் கொண்டிடேல்.

மன்பதைக் குழந்தை மயக்கினையறுக்கத்
தென்பினை யூட்டிடத் திருத்திட நல்லன
என்றும் தருகுதல் எல்லவர் கடனும்.
நின்றிடும் சான்றோர் திருநெறி யிதுவே'
என்றதோர் விடையே என்றனுள் ளத்தே
நின்றிட எழுந்தேன்; நிமிர்ந்து நின்றேனே. (130)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil

I consider myself fortunate to have visited the temple and remain grateful to the Committee members who had taken myself and members of the party round with great affection The management has to be congradulated for the upkeep of the temple. God willing I should come again and spend some more time here.

(Sd.)
Deputy Secretary to the Govt. of India
Ministry of Home Affairs,
New Delhi.

24—8—69.

I visited the temple with my family today evening. The Thambiran incharge, of the Dharmapuram Adhinam was most courteous and helpful to us throughout. I visited the temple on two prior occassions in 1950 and in 1955 and the improvements since made to the Shrines and their precincts are remarkable indeed. Very thoughtful consideration is shown to the conveni-ence of devotees. Everything that is done has been done to make the place more attractive, and at that time conserve the sanctity of the place.

(Sd) P. Ramakrishnan,
Judge High Court, TamilNadu

27—9—69.

# செய்திகள்

## தருமையில் காந்தியடிகள் நூற்றாண்டு விழா

தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர்கழகத்தின் சார்பில் 6-10-69 திங்களன்று காந்தியடிகள் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இறை வணக்கத் திற்குப்பின்னர் காந்தியடிகள்மீது பாரதியார் பாடிய பாடல்களை பாலுச்சாமி பாடினார். அன்பனுதபுரம் வகையார் அறத் துறைக்கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு அ. கலியபெருமாள் எம். ஏ. அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் வரவேற் புரை நிகழ்த்தினர். காந்தியடிகள் கடைப்பிடித்த நெறிகளைப் பற்றிய தலைப்பில் பேச்சுப்போட்டி நிகழ்ந்தது. அதில் வெற்றி பெற்ற சோ. வெற்றிக்கண்ணன். மு. சோமசுந்தரம், பாலுசாமி. த. சீனிவாசன் ஆகியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் வித்துவான் திரு வி. சபேசனர் அவர்களும், கழகச் செயலர் அரு. கலியமூர்த்தியும் நன்றிநவில நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## மாயூரம் வள்ளலார் கோவிலில் பாராட்டு விழா

தருமை ஆதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களுக்கு வைத்தீஸ்வரன் கோவிலில் நிகழ்ந்த மகா கும்பாபிஷேக விழா வில் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகாசந்நிதானம் அவர்களால் சிவாகம ரத்னகரம் என்னும் சிறப்புப் பட்டம் வழங்கியதைப் பாராட்டும் வகையில் மாயூரம் அர்ச்சகர் சங்கத்தின் சார்பில் ஆடுர் ஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியாரின் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. மாயூரம் வள்ளலார் கோவில் N. சுப்ரமணியக் குருக்கள் அவர்கள் அன்னருக்கு பொன்னடை போர்த்தி 108 ருத்திராட்ச மணி மாலை அணிவித்தார்கள். தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. சா. குருசாமி தேசிகர் அவர்களும் ஆனந்ததாண்டவபுரம் திரு. P. ராமதாஸ் அய்யர் அவர்களும் ஸ்ரீ ரசிகமணி அவர்களும் மற்றும் பலரும் பாராட்டுரை வழங்கி னர்கள். சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்கள் தமக்கு அளித்த பாராட்டுக்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களையே சாரும் எனக் கூறி நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

# வெள்ளிப் பாராட்டுக்கேடயம் வழங்கும் விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 2—7—1969 அன்று சிறப்பாக நடைபெற்ற ஜீரணோத்தாரண ஸ்வர்ணபந்தன ரசதபந்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக காலத்தில் தரிசனத்திற்கு வந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் எத்துன்பமும் இல்லாமல் மிகவும் வசதியாக இருந்து தரிசனம் செய்வதற்குப் பல்லாற்றானும் உதவிகள் செய்து கொடுத்த காவற்றுறையினரைப் பாராட்டும் முகத்தால், அவர்களுக்குத் தருமை ஆதீனத்தின் சார்பில், 30-9-1969 செவ்வாய்க்கிழமையன்று நிகழ்ந்த கிருத்திகை அபிஷேகநாளில் பகல் 12 மணி அளவில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதியில் "வெள்ளிப் பாராட்டுக்கேடயம்" இவ்வாலய பரம்பரைக் கர்த்தா தருமையாதீனம், 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களால் வழங்கப்பெற்றது.

சென்னை, தமிழ்நாட்டுக் காவற்றுறைத் தலைவர் உயர்திரு. R. M. மகாதேவன் அவர்கள் கேடயத்தைப் பெற்றுக்கொண்டு தமது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

'அறப்பணிச் செல்வர்'

# சிதம்பரம் டாக்டர், திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்கட்குப் பாராட்டு விழா

சிதம்பரம் திரு அரங்கசாமிப் பிள்ளை அவர்களுக்கு தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் வேளூர் மகாகும்பாபிஷேக விழாவில் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் சந்நிதியில் 'அறப்பணிச் செல்வர்' என்னும் பட்டமளித்து அருளாசி வழங்கியருளிய இந்நிகழ்ச்சியைக் குறித்து திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்களுக்கு சிதம்பரம் சுழற் கழகத்தினரும், சிதம்பரம் பொதுமக்களும் பாராட்டு விழாக்கள் நடத்திச் சிறப்பித்தனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளாசி அனுப்பியருளினார்கள்.

சிதம்பரம் திரு. கே அரங்கசாமிப் பிள்ளை அவர்கட்கு அறப்பணிச் செல்வர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்ததைக் குறித்துச் சிதம்பரம் அன்பர் V. நாராயணன் அவர்கள் தாம் அளித்த வரவேற்பு மடலில்:—

"மக்கட் பிணியகற்றும் மருத்துவ மன்னரும், வருவாய் கருதாது அரும்பணி புரியும் அருங்குண வள்ளலும் ஆகிய திரு. அரங்கசாமிப் பிள்ளை அவர்கட்கு சிவநெறிக்கு வழி வகுக்கும் அருள் வள்ளலாகிய தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அளித்தருளிய பட்டம் திருவருளால் கிடைத்த பெருஞ்சிறப்பு ஆகும்." என்று குறித்துள்ளார்கள்.

மாயூரத்தில் 5—10—'69 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் திருக்குறள்வேள் திரு ஜி. வரதராஜ பிள்ளை அவர்கள் தலைமையில், டாக்டர் திரு கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்கட்கும், மருத்துவத்துறை முன்னேற்றம் கருதி கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்றுவந்த சிதம்பரம் டாக்டர் திரு M. நடராஜன் அவர்கட்கும் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய பொன்னுடைகளை வேலூர் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்க தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இருவருக்கும் போர்த்தினர்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வழங்கியருளிய ஆசியுரைகளை ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் மகாவித்துவான் திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் இருவருக்கும் தனித்தனியே வாசித்தளித்தார்கள்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. சோமசுந்தரம் அவர்களும், அன்பர்கள் பலரும் பாராட்டுரை கூறினர்.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருவடிகட்கு, இருவரும் தத்தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

## ஆகஸ்டுமாத வழிபாடு

தமிழக மக்கட்கும், சிறப்பாகச் சைவர்கட்கும் ஆன்மிகச் சுதந்திரம் பெற்றுத்தந்த சைவ சமய குரவர்களின் அவதாரத் தலங்களையும், அருள் பெற்ற தலங்களையும் அரசியல் சுதந்திரத் திருநாளாகிய 15–8–69 அன்று காலை நிலைய வழிபாட்டுக் குழுவினர் ஒரு பஸ் மூலமாகத் திருவெண்ணெய் நல்லூர் சென்று திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சைவ சந்தான முதற் குரவராகிய ஸ்ரீ மெய்கண்டார் மடாலயத்திற்குச் சென்று வழிபாடு நிகழ்த்தினர். அடுத்து அருட்டுறை ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீ சுந்தரர், அம்மையப்பர் வழிபாடாற்றி பக்தர்கள்

பலரையும் மகிழ்வித்தனர். திரு. சி. பாலசுப்பிரமணியரெட்டியார் அவர்களும், அறங்காவலர்களும் குழுவினரைப் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்று உபசரித்தனர்.

பகல் ஒருமணியளவில் ஸ்ரீ சுந்தரர் அவதாரத் தலமாகிய திருநாவலூருக்கும், ஸ்ரீ பக்தஜனேசுவரர் ஆலயத்திற்கும்சென்று வழிபாடு நிகழ்த்தினர். ஆலய அறங்காவலர் திரு. நாராயண சாமிப் பிள்ளை அவர்களும், ஊர்ப் பொதுமக்களும் குழுவினரைப் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டை மிகச்சிறப் பாக நடத்திவைத்து உபசரித்தனர். குழுவினர் ஸ்ரீ பக்தஜனே சுவரரையும், ஸ்ரீ சுந்தரரையும், ஸ்ரீ மனோன்மணியம்மையாரை யும் தேவாரத் திருமுறை ஓதி வழிபட்டு மகிழ்ந்தனர். பின்னர் ஸ்ரீ சுந்தரர் அவதார மனையையும், அங்கு, சிவாசாரியர்களால் கட்டப்பெற்றுவரும் கோயிலையும் கண்டு போற்றினர்.

பிறகு ஸ்ரீ அப்பர் அவதாரத் தலமாகிய திருவாமூர் சென்று ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மையையும், ஸ்ரீ பசுபதீசுவரரையும் தரிசித்து ஸ்ரீ அப்பர் அவதார மனையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அப்பர் பெருமானையும் தரிசித்தனர். ஆலய அறங்காவலர் திரு R. நாராயண ரெட்டியாரும், ஊர்ப் பொதுமக்களும் குழுவினரை வரவேற்று உபசரித்தனர். மாலை 5 மணி அளவில் அப்பருக்குச் சூலை நோய் நீங்கியதும், அப்பர் அருள் பெற்றதுமான திருவதிகை சென்று வழிபாடு நிகழ்த்தினர் ஆலய சிவாசாரியர் களும், திரு. ந. சண்முகசுந்தர தேசிகர் அவர்களும் வழிபாட்டுக் குழுவினரை வரவேற்று முறையாக வழிபாடு செய்துவைத்தனர். திருவதிகை ஸ்ரீ அப்பர் இல்லத்து மாணவர்கள் தேவாரத் திருமுறை ஓதிச் சிறப்பித்தனர். மாலை 7-30 மணி அளவில் குழுவினர் சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராசப் பெருமானையும், ஸ்ரீ சிவகாமி யம்மையையும், திருமூலட்டானேசுவரரையும் வழி பட்டனர். தருமையாதீனக் கட்டளைத் தீக்ஷிதர் குழுவினரை வரவேற்று, வழிபாட்டை நன்கு நடத்திச் சிறப்பித்தனர். இரவு 9 மணியளவில் ஸ்ரீ திருஞானசப்பந்தர் அவதரித்ததும், ஞானப் பால் உண்டு அருள் பெற்றதுமான சீகாழிக்குச் சென்று அம்மை யப்பரையும், ஞானசம்பந்தரையும், சட்டைநாதரையும் முறை யாகத் திருமுறை ஓதி வழிபட்டனர். அன்று வெள்ளிக்கிழமை. ஸ்ரீ சட்டைநாதர் சிறப்பு வழிபாட்டையும் தரிசித்து மகிழ்ந்தனர். ஆலயக் கட்டளை விசாரணை தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் குழுவினரை வரவேற்று ஆலய வழிபாடு செய்வித்து மகிழ்வித்தார்கள்.

16—8—69 காலை 7 மணியளவில் குழுவினர் திருநள்ளாறு சென்று நள தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரர் ஆலய வழிபாட்டைச் சிறப்பாக நிகழ்த்தினர். ஆலயக் கட்டளை விசாரணை தவத்திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். அன்று மாலை குழுவினர் திருவெண்காடு சென்று முக்குள நீராடி அம்மையப்பர், நடராஜமூர்த்தி, அகோரமூர்த்தி முதலிய மூர்த்திகளை முறையாக வழிபட்டனர். நிர்வாக அதிகாரியும் ஆலயப் பணியாளர்களும் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்திவைத்தனர். பின்னர், திருக்கடவூர்மயானம் திருக்கோயிலிலும் திருக்கடவூர் ஆலயத்திலும் குழுவினர் முறையாக வழிபாடாற்றினர். அன்று மதியம் வைத்தீசுவரன்கோயில் மண்டலாபிஷேக வழிபாட்டைக் குழுவினர் உபயமாக ஏற்று அபிஷேக ஆராதனைகளைச் சிறப்புறச் செய்துவைத்தனர்.

மறுநாள் 17—8—69 ஞாயிற்றுக்கிழமைகாலை வைத்தீசுவரன் கோயிலில் நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் குழுவினர்கள் கலந்துகொண்டு, அபிஷேக ஆராதனைகளைக் கண்ணாரக்கண்டு பெரும் பயன் எய்தினர். அன்று மாலையில் திருப்புன்கூர் சென்று ஸ்ரீசிவலோகநாதரைத் தரிசித்து மகிழ்ந்து சென்னை மீண்டனர்.

## வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

10—7—69 வியாழக்கிழமை கிருத்திகையன்று வைத்தீசுவரன்கோயிலில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு நடைபெற்ற அபிஷேக, அர்ச்சனை, சந்தனக்குழம்பு பிரசாதங்கள் 11—7—69 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் ஆடிட்டர் திரு. V.N. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் வேலூர்த் தேவாரம் திருப்புகழ்ப் பிரார்த்தனை நிகழ்த்தி கிருத்திகைப் பிரசாத உறுப்பினர்கட்கும், பக்தர்கட்கும் வழங்கப்பட்டன. தலைவர் தமது தலைமையுரையில் இறைவனை நினைக்கவும், அவனுக்குப் பணி செய்யவும் அவனேதான் நமக்கு அருள்செய்ய வேண்டும் என்றும், சைவர்களின் அடிப்படைக்கொள்கை புலால் உண்ணாதிருப்பதே என்றும் குறிப்பிட்டார்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

6—8—69 புதன்கிழமை நடைபெற்ற வேலூர்க் கிருத்திகை அபிஷேக அர்ச்சனை ஆராதனைப் பிரசாதங்கள் 7—8—69 வியா

ழக்கிழமை மாலை 7 மணிக்கு திரு. S, வடிவேல்பிள்ளை B.A., L.T., அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தி கிருத்திகைப் பிரசாதம் உறுப்பினர்களுக்கும், அன்பர்களுக்கும் வழங்கப்பெற்றன.

3—9—69 புதன்கிழமை கிருத்திகையன்று வைத்தீசுவரன் கோயிலில் நடைபெற்ற ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியின் அபிஷேக அர்ச்சனை ஆராதனைப் பிரசாதங்கள் 4—9 69 வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு வித்துவான். திரு. P. வடிவேல் பிள்ளை அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தி கிருத்திகைப் பிரசாத அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. சங்கீத வித்வான் திரு K, C. தியாகராஜன் அவர்கள் வேளூர்த்தேவாரத் திருமுறைகளைப் பண்ணிசையோடு பாடி மகிழ்வித்தார்கள்.

## புள்ளிருக்குவேளூர்

# மகாகும்பாபிஷேகப் பிரசாதம் வழங்கும் விழா

2—7—69ல் மிகச்சிறப்பாக நடைபெற்ற வைத்தீஸ்வரன் கோயில் மகாகும்பாபிஷேகத் தீர்த்தப்பிரசாதமும், விபூதி குங்குமப்பிரசாதமும் 7-7-69 திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு, சென்னைப் பிரசாரநிலைய மன்றத்தில் தமிழக அரசின் சட்டத் துறைச் செயலர் திரு. T. S. இராமலிங்கம் பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பெற்றன. தலைவர் தமது தலைமையுரையில் வேளூர் மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றதை வானொலி வாயிலாகக் கேட்டு மகிழ்ந்ததாகவும் கும்பாபிஷேகத்திற்குச் சென்றவர்கட்கே கிடைத்தற்கரிய பிரசாதம் நமக்குக் கிடைப்பது பெரும் பாக்கியம் என்றும், தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் இந்நிலைய வாயிலாகப் பல நற்செயல்களைச் செய்வதில் இச்செயல் மிக மேலானது என்றும் குறிப்பிட்டார்கள்.

தவத்திரு. சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் பேசுகையில் சென்னை நிலைய அன்பர்கள் மூலம் கும்பாபிஷேக தரிசன டிக்கெட் விற்ற வகையில் எண்ணாயிரம் ரூபாய் வேளூருக்குச் சேர்ப்பித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதென்றும், டி கும்பாபிஷேகப் பணியில் பல வகையிலும் பங்கு கொண்ட நிலைய அன்பர்கட்கு நன்றி பாராட்டுவதாகவும் குறிப்பிட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியையும் தெரிவித்தார்கள்.

## சென்னை சமயப்பிரசார நிலையத்தில்

# வேளூர் தேவஸ்தான இறைபணிமண்டபக் கால்கோள் விழா

" சென்னை தியாகராய நகரிலுள்ள தருமையாதீனம் வேளூர் தேவஸ்தானத்தைச்சார்ந்த வேளூர் தேவஸ்தானம் இறைபணி மண்டபத்திற்கு 26-8-69 செவ்வாய் மாலை 7-30 மணியளவில் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி கனம். K. வீராசாமி அவர்கள் தலைமையிலும் தமிழக அரசின் முதலமைச்சர் மாண்புமிகு. திரு. மு. கருணாநிதி அவர்களின் முன்னிலையிலும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. திரு. கே.வி. சுப்பையா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். "

" அமைச்சர் மாண்புமிகு. திரு. கா. வேழவேந்தன், சிதம்பரம் டாக்டர். திரு. K. அரங்கசாமி அவர்கள், நக்கீரர் கழகச் செயலர் திரு. மோகனசுந்தரம் முதலிய பலரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். "

## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B.A., B.L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

## எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( சௌம்யஹூ ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய )
( 17—10—69 முதல் 15—10—69 முடிய )

துலா ராசியில் பகல் 15 நாழிகை 52 வினுடிக்கு உச்சிவேளை யில் லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் பிரவேசம் செய்கிறுர். துலா விஷு புண்ணியகாலம்.

### 1. மேஷம் - அசுவதி - பரணீ - கார்த்திகை ¼

மேஷ ராசி ஒன்பது பாதங்களும் சுபமாகும். நூதன முறை யில் நண்பர்கள் மூலமாய் தொழில் விருத்தியாகும். தூர பிரயா ணம் ஏற்படும். விவசாயம் ஓங்கும். ஸ்திரசுகஜீவனம் ஏற்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். தெய்வபலம் பிரகாசிக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணீ - மிருகசீர்ஷம் ½

விருஷப ராசி ஒன்பது பாதங்களும் சுபமேயாகும். இடம் மாறுதலுடன் சிரமமில்லாத ஜீவனம் கிடைக்கும். குடும்பம் மேன்மை அடையும். கீர்த்திப்பத்திரம் கிடைக்கும். தெய்வபலம் ஓங்கும் நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரபலனைத்தரும். வரவு செலவு சமனுகும். தூரதேசத்திலிருந்து அழைப்புபத்திரம் கிடைக்கும். விவகாரம் ஜெயிக்கும். விரோதம் நீங்கும். கிரய விக்ரயங்கள் ஏற்படும். உத்தியோக லாபம் உண்டாகும். கிரக கிராமபிவிருத்தியாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடக ராசி பூராவும் சுபமேயாகும். எதிர்பாராத லாபம் கிடைக்கும். கீர்த்தி ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும். சுப சோபனதிகளும், நூதன வஸ்திராபரணங்களும் வந்து

சேரும். பந்துமித்திராதிகளால் பூஜிக்கும் தன்மையும், தூரப் பிரயாணமும் சித்திக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி ஒன்பது பாதங்களும் சுபமாகும். வித்யை விருத்தியாகும். ஜீவனம் ஓங்கும். வியவகாரம் ஜெயிக்கும். ஆரோக்யம் உண்டாகும். குடும்ப சுகம் ஏற்படும். நஷ்டமான பொருள் வந்துசேரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரமான பலனைக் கொடுக்கும். வியவசாய காரியங்களிலும், இல்லற வாழ்க்கைகளிலும் கவலை உண்டுபண்ணும். வரவு செலவு சமனாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். ஆனாலும் மருந்துகள் அடிக்கடி உபயோகப்படுத்தும்படி இருந்துகொண்டிருக்கும். புத்திரர்களாலும், அன்பர்களாலும் விசேஷ மாற்றம் ஏற்படும். தானதர்ம பலன்களும், கீர்த்திப்பத்திரமும் கிடைக்கும். சகல காரியங்களும் கொஞ்சம் தயக்கத்தோடு சித்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி ஒன்பது பாதங்களும் சுபமேயாகும். மகாயக்ஞங்களுடைய பலன்களும், தெய்வசக்தியும் ஓங்கும். எதிர்பாராத லாபங்களும் கிடைக்கும். இல்லற சுகம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். புத்திராதிகளாலும், நண்பர்களாலும் விசேஷ நன்மை உண்டுபண்ணும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி ஒன்பது பாதங்களும் சுபமேயாகும். உயர் பதவியோடு உத்தியோகம் சித்திதரும். வம்சவிருத்தி ஏற்படும். குடும்பசுகம் ஏற்படும். அடிக்கடி பந்துமித்திரர்களுடைய சேர்க்கையும், நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும் உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்,

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர் ராசி ஒன்பது பாதங்களும் மிச்ரமானபலனைத்தரும். சகல காரியங்களும் தெய்வபலத்தால் சித்தியாகும். இடம் மாறுதலும், நண்பர்களுடைய சேர்க்கையும், சுப சோபனங்களும்

ஏற்படும். இராஜாங்கமைத்திரத்தால் நூதன முறையில் தொழில் ஓங்கும். துக்கம் நிவர்த்தியாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**10. மகரம். ¾ உத்திராடம் - திருவோணம் - அவிட்டம் ½**

மகர ராசி ஒன்பது பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். உத்தியோகத்தில் மேல்பதவி ஏற்படச்செய்யும். ஆரோக்கியம் தரும். இல்லற சுகம் ஓங்கும். தனதான்யம் விருத்தியாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**11. கும்பம்-அவிட்டம் ½. - சதயம் - பூரட்டாதி ¾.**

கும்ப ராசி ஒன்பது பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி வைத்திய வசதிகள் செய்துகொள்ளவேண்டியிருக்கும். நூதன வஸ்திராபரணங்கள் சேரும். பந்துமித்திராள்மூலம் செலவுகள் அதிகம் ஆகும். தேவாலய வழிபாடுகளும், தேவதா குரு தரிசனமும் அடிக்கடி ஏற்படும். மனம் சாந்தி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**12. மீனம் பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.**

மீன ராசி ஒன்பது பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். உத்தியோகமூலமாயும், மேல் பதவிகளினுல் தனலாபங்களும் ஏற்படச்செய்யும். சதா தெய்வசிந்தனையாகவே இருந்து கொண்டு இருக்கும். ஸபாபூஜ்யத்துவமும், உலக மக்களால் கொண்டாடும் தன்மையும் ஏற்படும். வித்திவை விருத்தியாகும். தெய்வ சத்தி ஓங்கும். நல்லோர் பெரியோர்களுடைய சேர்க்கை சதாவும் இருந்துகொண்டே இருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு :— ஐப்பசிமீ அமாவாசை தினமும், மறுதினமும் துலா ராசியில் ஸ்ரீ சனிபகவானுக்கு ஏழில் ஐந்து கிரகங்கள் சூரியன், சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இவர்கள் சஞ்சாரம் ஏற்படுவதால் மழைகாலத்தில் பெய்யக்கூடிய மழைகள் கண்டம் கண்டமாயும் சில இடங்களில் அதிவிருஷ்டியும், சில இடங்களில் சுவல்ப்பமாயும், சில இடங்களில் மழையே பெய்யாமலும் சில இடங்களில் ஈதிபாதைகளால் ஸஸ்யாதி தான்யங்களுக்கு கொஞ்சம் பாதைகளும் காட்டுமாகையால் தர்மமே ஜயிக்கும். பிராசீனத்தை அலக்ஷியம் செய்யாமல் காப்பாற்றப்படுகின்ற இடங்களிலும், தர்ம பூமிகளிலும் பயமில்லாமல் ஸஸ்யதான்ய விருத்தியாகி பிரஜைகள் சந்தோஷமடைவார்கள். உலக நிர்வாகம் ஓங்கும். கலிபலம் குறைந்து தெய்வசக்தி முன்னின்று காக்கும். சுபம்.